திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஏப்ரல் 2021..... விலை ரூ.5/-



ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்

2021 ஏப்ரல் 21 முதல் 29 வரை

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## 21-04-2021 முதல் 29-04-2021 வரை



21-04-2021 புதன் கிழமை
பகல்:துவஜாரோஹணம்
இரவு:சேஷ வாகனம்

22-04-2021 வியாழக்கிழமை
பகல்:வேணுகான அலங்காரம்
இரவு:ஹம்ஸ வாகனம்

23-04-2021 வெள்ளிக்கிழமை
பகல்:வடபத்ரசாயி அலங்காரம்
இரவு:சிம்ம வாகனம்

24-04-2021 சனிக்கிழமை
பகல்:நவநீத கிருஷ்ண அலங்காரம்
இரவு:ஹனுமத்சேவை

25-04-2021 ஞாயிற்றுக்கிழமை
பகல்:மோகினி சேவை
இரவு:கருட சேவை

26-04-2021 திங்கட்கிழமை
பகல்:சிவதனுர்பாண அலங்காரம்
இரவு:வரவேற்பு, கல்யாணோத்ஸவம்
யானை வாகனம்

27-04-2021 செவ்வாய்க்கிழமை
பகல்:திருத்தேர்

28-04-2021 புதன் கிழமை
பகல்:காளிங்கமர்தன அலங்காரம்
இரவு:குதிரை வாகனம்

29-04-2021 வியாழக்கிழமை
பகல்:சக்கர ஸ்நானம்
இரவு:துவஜாவரோஹணம்



பாராவார பயோ விசோஷண கலா
பாரீண காலாநல-
ஜ்வாலா ஜால விஹார ஹாரி விசிக
வ்யாபார கோர க்ரம: ।
ஸர்வாவஸ்த்த ஸக்ருத் ப்ரபந்ந ஜநதா
ஸம்ரக்ஷணை க வ்ரதீ
தர்மோ விக்ரஹவாந் அதர்ம விரதிம்
தந்வீ ஸ தந்வீத ந: ॥

கடலின் நீரை வற்றச் செய்யும் கலையில் வல்லமையுடையதாய் ப்ரளயகாலத்து அக்நியின் ஜ்வாலைக் கூட்டத்தின் விளையாட்டை வெல்வதாயுள்ள (அதற்கும் மேலான) அம்புகளின் செயல்களின் கொடிய முறையுடைய வனாய் எந்த நிலையிலுமுள்ள ஒரு முறை சரணமடைந்த சேதநக் கூட்டத்தை காத்தலையே முக்கிய விரதமாகவுடையனாய், உருவமெடுத்து வந்த தர்மமாயுள்ளவனாய், ஒப்பற்ற வில்லாளனாயுள்ள அந்த இராமபிரான் நமக்கு அதர்மத்தின் ஒழிதலை செய்தருள வேண்டும்.

- தசாவதார ஸ்தோத்ரம்



ஹ்ருஷிகேசம் தத$_3$ா வாக்யம்
இத$_3$மாஹ மஹீபதே |
அர்ஜுந உவாச
ஸேநயோருப$_4$யோர்மத்$_3$யே
ரத$_2$ம் ஸ்த$_2$ாபய மே$_3$ச்யுத ||

ஹ்ருஷீகேசனான பகவான், ஸ்ரீகிருஷ்ணனிடம் இந்த வசனத்தைக் கூறினார். அச்யுதா! என்னுடைய ரதத்தை இரண்டு படைகளுக்கும் நடுவில் நிறுத்துங்கள்.

- ஸ்ரீமத் பகவத் கீதை 1-21



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

## திட்டத்தின் நோக்கங்கள் :

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

## ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்வித தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் – "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி – 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

**சமய மாத இதழ்**

## ஏப்ரல் 2021


மலர் 51

இதழ் 11



சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
**பேராசிரியர் K. ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


**சுந்தர காண்டம்** 7
- திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.

**திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : மூன்று வகை பக்தர்கள்** 10
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

**மதுரகவியும் மதுரகவிதாசனும்** - திரு. ஏ.வி. ரங்காசாரி, சிதம்பரம். 12

**ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்** 15
- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.

**மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...** 18
- ஸ்ரீ. உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்.

**தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** 21
- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.

**குழந்தை பாக்கியம் அருளும் மீமிசல் ஸ்ரீகல்யாணராமர்** 23
- அறந்தாங்கி சங்கர், சென்னை.

**பாதுகை சுமந்த பரந்தாமன்** -செல்வன் என். யோகேஷ், மேல்படூர். 25

**திருவேங்கடவன் திருலீலைகள்: புராதன சொம்பு** 31
- திரு. இரா. வசந்தராசன், கிருஷ்ணகிரி.

**சித்திரை மாத சிறப்புகள்** - முனைவர் ச. செந்திலாண்டவன். 32

**தத்வமஸி யானே நீ** - திரு. பி.டி. சேஷாத்திரி, சென்னை. 34

**பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள் : ஹேதிபுங்கவஸ்தவம்** 37
-உ.வே. டாக்டர். அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை.

**108 திவ்யதேச வைபவம் – ஸ்ரீவில்லிபுத்தூர்** 40
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** 45
- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

**ஆயுர்வேதம் : மாதுளம்பழம்** - திருமதி உஷா, திருப்பதி. 47

**ஸ்ரீமத் பகவத்கீதை** - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 49

**நீதிக்கதைகள் : வென்றது நாம ஜெபம்** 51
- திரு. கே. இராமநாதன், சேலம்.

**சித்திரக்கதை : அனைவருக்கும் மோட்சம்** 52


### அட்டைப்பட விளக்கம்

**முன்னட்டை :** ஸ்ரீசீதா சமேத ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி, ஒண்டிமிட்டா, கடப்பா.

**பின்னட்டை :** ஸ்ரீசீதா லக்ஷ்மண சமேத ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி, திருப்பதி.

# சீர்மிகு சித்திரை

உலகமெங்கும் உள்ள தமிழர்கள் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் முதல் நாளினை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றனர். நம் தமிழ் பஞ்சாங்கம் சௌரமானப்படி சூரியனை முன்னிட்டே கணக்கிடப்படுகிறது. அதன்படி சூரிய பகவான் ராசி மண்டலத்தில் முதல் ராசியான மேஷத்தில் பிரவேசிக்கும் நாளே சித்திரை முதல் நாளாகும். புதிய எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் வைத்து மங்களகரமான நன்னாளாக சித்திரை வருடத்தை வரவேற்று கொண்டாடி வருகின்றோம்.

சித்திரையின் துவக்கமே இளவேனிற் காலமான வசந்த காலமாக துவங்குகின்றது. இந்த வசந்த காலத்தில் தான் மாமரங்களில் மாந்தளிர்களும், வேப்ப மரங்களில் பூக்களும் பூத்துக்குலுங்கும். வாழ்க்கை என்பதே இனிப்பும், கசப்பும் கலந்ததே என்பதற்கான எடுத்துக்காட்டாக இது கருதப்படுகிறது. மக்கள் சித்திரை மாதத்தின் முதல் நாள் அதிகாலையில் எழுந்து கோயில்களுக்குச் சென்று வாழ்வில் எல்லா வளங்களும், நலங்களும் பெற வழிபடுகின்றனர். இம்மாதத்தில்தான் அவதாரங்களில் முதலாவதான மத்ஸ்ய அவதாரமும் மேலும் ஸ்ரீபரசுராம ஸ்ரீராம அவதாரங்களும் நிகழ்ந்தன.

இந்த சித்திரை மாத வளர்பிறை பஞ்சமியில் தான் திருமகள் பூலோகத்திற்கு வந்ததாக ஐதீகம். எனவே இந்நாளில் லட்சுமி பூஜை செய்து வழிபட்டால் செல்வம் பெருகும். அதே போன்று அஷ்டமியில் அம்பிகை அவதரித்ததாகக் கருதப்படுகிறது. அன்றைய தினம் புனித நதிகளில் நீராடுவதும் சிறப்பானதாகும். சித்திரை மாதத்தின் வளர்பிறையில் மூன்றாவது நாளான திருதியை திதியை “அட்சய திருதியை” என்பர். இந்நாளில் செய்யப்படும் நற்செயல்களான தான தர்மங்கள் அள்ள அள்ள குறையாத அதிக பலன்களைத் தரும். அதுமட்டுமின்றி இந்நாளில் உணவு தானியங்களை தானம் செய்தாலும் கால்நடைகளுக்குத் தீவனம் அளித்தாலும் வாழ்வு வளம் பெறும். நாம் செய்யும் தவறுகளை கவனித்துக் கொண்டும் கணக்கெடுத்துக் கொண்டும் சித்திர குப்தன் இருக்கின்றான் என்பர். அந்த சித்திர குப்தனும் தோன்றியது இந்த சித்திரை மாதம் சித்திராப் பௌர்ணமி அன்று தான். அன்றைய தினம் விரதமிருந்து தங்கள் பாவக்கணக்குகளை குறைத்து, மேலும் பாவம் செய்யாமலிருக்க துணை புரிய வேண்டி பெரியோர் வேண்டிக்கொள்வர்.

சித்திரை மாதப் பௌர்ணமி நாளை மிகச் சிறந்த விழாவாகச் சிற்றூர், பேரூர்களில் கொண்டாடப் படுகின்றது! சித்ரா பௌர்ணமி நாள் நம் நலம் நாடும் சித்தர்களுக்கும் அற்புதமான நாள்! மேலும் சிற்றூர் தெய்வங்களுக்கும் “தீமிதித் திருவிழா” என்றும், “குண்டம் இறங்குதல்” என்றும் சித்ராப் பௌர்ணமி நாளில் நடைபெறும். பெரிய திருக்கோயில்களில் சிவன்–பார்வதி திருக்கல்யாணம் நடைபெறும். காமனை நெற்றிக் கண்ணால் எரித்தவர் சிவபெருமான். அந்தக் காமதகனம் நடந்ததும் சித்ராப் பௌர்ணமியில் தான். பிறகு ரதிதேவியின் வேண்டுதலுக்கிணங்கி, அவள் கண்ணுக்கு மட்டும் மன்மதன் தெரிவான் என்ற வரம் தந்ததும் அப்பொழுதுதான். “அமுதுபடையல்” என்ற அன்னதானமும் பல ஊர்களில் நடைபெறும்! மதுரையில் கள்ளழகர், வைகை ஆற்றில் இறங்கி அருள் புரியும் திருநாளும் சித்திரைத் திங்களில்தான்.

இவ்வாறு சைவ–வைணவ பேதமின்றி எல்லாத் திருக்கோயில்களிலும் எல்லோரது வீடுகளிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவது சித்திரைத் திங்களாகும். இந்த ஆண்டு முழுவதும் தீயவையொழிந்து நல்லவை நடக்க எல்லாம் வல்ல அத்திருவேங்கடவனின் திருவடிகளைத் தொழுவோம். இத்தமிழ்ப்புத்தாண்டின் பொலிவு எல்லார்க்கும் நல்லதே விளைக்கட்டும்.



# சுந்தர காண்டம்

திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி. 9440120758.

இராமாயணத்தில் ஐந்தாவது காண்டம் சுந்தர காண்டம். இது ஸ்ரீராமநாமத்தின் பெருமையை முழுவதுமாக விளங்க வைக்கும் காண்டம். "எல்லா வித துன்பங்களும் நீங்க "சுந்தர காண்டம்" வாசிப்பதோ அல்லது கேட்பதோ மிகவும் சிறந்தது என்பார்கள் பெரியோர்கள். இராமாயணத்தின் நாயகனாக ஸ்ரீராமபிரானும் நாயகியாக சீதாப்பிராட்டியும் இருந்தாலும் கூட இந்த சுந்தர காண்டத்தின் நாயகனாக ஆஞ்சநேயருக்கு மிகச் சிறந்த இடத்தை வால்மீகி மகரிஷி கொடுத்துள்ளார்.

"சுந்தர" என்னும் நாமம் அனுமனைக் குறிக்கும். சிவ பெருமானின் அம்சமாகக் குறிப்பிடப்படுபவர் ஆஞ்சநேயர். சிவபெருமானின் ஒரு திருநாமம் சுந்தரேஸ்வரர். ஆகவே ஆஞ்சநேயருக்கும் "சுந்தர" என்கிற பெயரை, தாயார் அஞ்சனாதேவி சூட்டியிருந்தார். இந்த காண்டம் முழுவதும் நிறைந்திருப்பவர் ஆஞ்சநேயரே என்பதால் இதற்கு "சுந்தர காண்டம்" என்று பெயரிட்டது மிகப் பொருத்தமே.

ஸ்ரீராம நாமத்தைத் துணையாகக் கொண்டே எதிர்ப்பட்ட அத்தனை இன்னல்களையும் ஜெயித்தார். முழு இராமாயண கதையையும் நம்மால் இந்த சுந்தர காண்டத்தில் பார்க்க முடியும். ஸ்ரீராம நாமத்தை ஜபித்துக் கொண்டே மகா சமுத்திரத்தைத் தாண்டினான் அனுமன். அசோக வனத்தில் சீதா தேவியைக் கண்டபோது, அவளிடம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள, தான் இராம தூதன் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்த பால காண்டம் தொடங்கி முழு இராமாயண கதையையும் எடுத்துரைக்கிறார்.

அது மட்டுமல்ல. ஸ்ரீராமபிரான் வந்து இராவணாதியரை ஜெயித்து, சீதா தேவியை மீட்டுக் கொண்டு அயோத்தி திரும்பி அவர்கள் இருவரும் அரசாளப் போவதையும் முன் கூட்டியே சொல்லி தேவியின் சோகத்தை நீக்குகிறார். ஸ்ரீராமபிரானின் அடையாளமாக எம்பெருமானின் கணையாழியை (மோதிரத்தை) பிராட்டியிடம் தந்து அவள் ஆனந்தப்படுவதைப் பார்த்து கண்கலங்குகிறார்.

*"அஞ்சனா நந்தனம் வீரம் ஜானகீ சோக நாசனம்*
*க்பீஸ மக்ஷ சுந்தாரம் வந்தே லங்கா பயங்கரம்"*

தேவியிடம், தாங்கள் கட்டளையிட்டால் இந்த கணமே இந்த இலங்கையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு போய் தங்களை அண்ணாவிடம் சேர்க்கிறேன் என்று உறுதியளிக்கிறார். இதில் அவரது தன்னம்பிக்கையும் ஸ்ரீராம நாமத்தின் மேல் அவருக்கிருந்த திடசங்கல்பமும் புரிகிறது. வாழ்வில் எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் இராம நாமம் ஒன்று போதும், வெற்றியை அடைவதற்கு என்பதை ஆஞ்சநேயரின் மூலமாகக் காட்டியிருக்கிறார் வால்மீகி. அது மட்டுமல்ல, தங்கள் லட்சியம் இது தான் என்கிற உறுதி இருந்துவிட்டால், அதை அடைவதற்கு வரும் தடைகள் எல்லாம் ஒரு தூசு போலத்தான் என்பதையும் ஆஞ்சநேயரின் விடா முயற்சியின் மூலம் நமக்கு உணர்த்தியிருக்கிறார்.

# சுந்தர காண்ட பாராயணப் பலன்கள்



1)முதல் அத்தியாயத்தைத் தொடர்ந்தாற்போல ஆறு மாதங்கள் பாராயணம் செய்தால் முக்தி அடையலாம். 2) மூன்றாவது அத்தியாயத்தைப் படித்தால் பேய், பிசாசு, செய்வினையிலிருந்து விடுபடலாம். 3) ஏழு முதல் பதினோறு அத்தியாயங்கள் வரை வாசித்தால் செல்வமும், சந்தோஷமும் உண்டாகும். 4) பதிமூன்றாவது அத்தியாயம் மந்த புத்தியை சரியாக்கி, தேர்ந்த அறிவைக் கொடுக்கும். 5) பதினைந்தாவது அத்தியாயம் கெட்ட கனவுகளிலிருந்து விடுபடச் செய்யும். அதாவது துர்ஸ்வப்ன நிவர்த்தி. 6) பத்தொன்பதாவது அத்தியாயம் வாசிக்க நமது வாக்கில் இனிமையும், நல்லெண்ணங்களும் உண்டாகும். 7) இருபதும், இருபத்தொன்றும் விட்டுப்போன உறவுகளை நம்முடன் சேர்த்து வைக்கும். 8) இருபத்தேழாவது அத்தியாயம் நல்லறிவையும், புத்தி சாதுர்யத்தையும் கொடுக்கும். 9) முப்பத்தாறாவது அத்தியாயம் நம்மை வரப்போகும் அபாயங்களிலிருந்து காப்பாற்றும். 10) முப்பத்தெட்டாவது அத்தியாயம் நாம் தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் பாபங்களுக்குப் பரிகாரம், 11) நாற்பத்திரெண்டு முதல் நாற்பத்தேழாவது அத்தியாயம் வரை வாசித்தால் நம் பகைவர்களை ஜெயிக்கலாம். 12) ஐம்பத்தோராவது அத்தியாயம் நியாய வழியில் சொத்து சேர்க்க, வீடு, நிலம் வாங்க உதவும். 13) அறுபத்தோராவது அத்தியாயம் மன அமைதியையும், நாற்பத்தோராவது அத்தியாயம் நாம் வேண்டிக் கொள்ளும் பிரார்த்தனைகளை நிறைவேற வழி செய்யும். 14) அறுபத்தேழாவது அத்தியாயம் நாம் முக்தி பெற்று, எம்பெருமானை அடைய வழி காட்டும்.

மொத்தத்தில் சுந்தர காண்டத்தை ஒரு மண்டலம் (அதாவது 48 நாட்கள்) தொடர்ந்து பாராயணம் செய்தோமானால் எடுத்த காரியத்தில் வெற்றியும், ஜெயமும் பெற்று நமது இலட்சியத்தை அடையலாம்.

**மேற்கூறியபடி இராமாயண சுந்தர காண்ட அத்தியாயங்களைப் பாராயணம் செய்து அதற்கான பலன்களைப் பெறுவோம்**

சுந்தர காண்டம் படிப்பதால் துன்பங்கள் விலகி விடும் என்பதற்கு உண்மையான அர்த்தம் என்ன தெரியுமா?நமக்கு கஷ்டங்களும், சிரமங்களும் வரும் போது அதிலிருந்து விடுபட உண்மையான முயற்சி செய்ய வேண்டும் என்பது தான். “நமக்குத் துன்பம் வந்து விட் டதே. இனிமேல் நம் வாழ்க்கை இவ்வளவு தான் என்று நொந்து கொண்டு உட்காராதே. ஆஞ்சநேயர் தேவியைத் தேடச் செய்த முயற்சிகளைப் பார்” என்பதைத் தான் நமக்கு சுந்தர காண்டம் எடுத்துரைக்கிறது. அனுமன் கடல் தாண்டி இலங்கையில் நுழைகிறார். முன்பின் தெரியாத ஊர். இராவணனோ மாயாவி. தேவியை எங்கே மறைத்து வைத்திருப்பான் என்று தெரியாது. அந்த ஊருக்குப் போய் யாரை கேட்க முடியும்? கேட்டால்தான் சொல்லுவார்களா? தங்கள் அரசனின் அடிமைகள்.

அதுவும் யாருடைய கண்களிலும் படாமல் போக வேண்டும். ஆயினும், அனுமன் நம்பிக்கையைக் கை விடவில்லையே. ஸ்ரீராம நாமம் துணையிருக்கும் போது நம்மை யார் என்ன செய்து விட முடியும்? என்கிற திடமான உறுதி, சமுத்திரத்தைத் தாண்டும் போது குறுக்கிடுகிறது மலை. தங்கி இளைப்பாறச் சொல்லுகிறது. இருந்தும் காரியமே கண்ணாக அனுமன் சிரமத்தைப் பாராமல் கிளம்புகிறான். காவல் தெய்வமான அரக்கி லங்கினியை ஜெயித்து அசோக வனத்திற்குள் நுழைந்து, அரக்கிகளுக்கு மத்தியில் இருந்த சீதா பிராட்டியைக் காண்கிறான். தன் வாக்கு சாதுர்யத்தால் தேவியின் வேதனையைத் தீர்த்து ஸ்ரீராமபிரானின் மோதிரத்தை அளிக்கிறான்.

அசோக வனத்தை அழித்து, இராவணனுக்குக் கிலியை ஏற்படுத்தி, அவனது சபைக்கேச் சென்று

தான் இராமதூதன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான், ஸ்ரீராமபிரானின் பெருமைகளைக் கூறித் தேவியை ஒப்படைக்கும்படி சமாதான வார்த்தைகள் பேசுகிறான்.



சினமுற்ற இராவணன் அனுமனின் வாலுக்குத் தீ வைக்க கட்டளையிட, அதற்கும் அஞ்சாமல் ஸ்ரீராமனையும், சீதாதேவியையும் துதிக்க, அந்த “தீ” பனி போல குளிர்கிறது. அதைக்கொண்டே இலங்கை நகரின் அழகை எரித்து, தேவி அளித்த சூடாமணியை வாங்கிக் கொண்டு ஸ்ரீராம பிரானிடம் திரும்புகிறான்.

இராமபிரான் பேரின்பத்துடன் அனுமனை ஆரத் தழுவிக் கொள்கிறார். இது எந்த பக்தனுக்கும் கிடைக்காத அங்கிகாரம். ஏனெனில் பரம்பொருளே ஜீவாத்மாவை ஆனந்தத்துடன் சேர்த்துக் கொண்டது எவ்வளவு பெருமை?

ஆகவே நம்பிக்கையையும், விடாமுயற்சியையும் நமக்கு விளக்குகிறது சுந்தர காண்டம். உணர்ந்து செயல்பட்டால் வெற்றி நமக்குத்தான். வாழ்க்கையை நம்பிக்கையுடன் பயணியுங்கள். பகவானை நம்புங்கள். முயற்சி உன்னுடையது. பலனைத் தருபவர் பகவான். அவரவர் திறமை, வலிமையைப் பொறுத்தே நமக்கு வரும் சவால்களும் அமைகின்றன. ஆகவே சோர்ந்து போய் விடாமல் எந்த சவால்களையும் எதிர்கொள்ளுங்கள் என்பதை நமக்கு விளக்குவதே சுந்தர காண்டம்.


சிவபெருமானிடம் பார்வதி தேவி ஸ்ரீமத்ராமாயணத்தின் மகிமையைக் கேட்டு அறிந்தபோது, அதில் எந்த காண்டம் தங்களுக்கு மிகவும் உகந்தது என்று வினவியபோது, அதற்கு பரமேஸ்வரர் அளித்த பதில் இது. “ஸ்ரீமத்இராமாயண காவியம் ஸ்ரீராமபிரானின் உயர்ந்த பண்புகளையும், பெருமைகளையும் விளக்கியிருந்தாலும் அதில் சுந்தர காண்டமே மிகவும் மேன்மையானது.

எப்படி ஒரு தோட்டத்தில் எத்தனையோ இனிமையான பழ மரங்கள் இருந்தாலும், அவைகள் எல்லாம் ஒரு கற்பகத்தருவுக்கு ஈடாகாதோ, ஒரு கௌஸ்துப மணிக்கு நிகர் ஆகாதோ, அதைப் போன்றது இந்த சுந்தர காண்டம்.

இதை வாசிப்பவர்கள் அனுமனைப் போல தங்கள் லட்சியத்தில் வெற்றி அடைவார்கள் என்று உரைக்க, அதைப் பார்வதி தேவி ஆமோதித்தாளாம். சுந்தர காண்டத்தின் மேன்மைக்கு இதை விட வேறு சான்று வேண்டுமோ?

சுந்தர காண்டத்தை வாசிப்போம். எடுத்த காரியத்தில் வெற்றியடைவோம்.

# மங்கள சுலோகங்கள்



*குருர் ப்ரம்மா குருர் விஷ்ணுர் குருர்தேவோ*
*மஹேச்வரஹ ।*
*குருஹ் ஸாக்ஷாத் பரம் ப்ரம்ம தஸ்மை*
*ஸ்ரீகுரவே நமஹ ॥*

**குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே மஹேஸ்வரன், குருவே கண்கண்ட பரப்பிரம்மம்; அந்த குருவிற்கு வணக்கம்.**



பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

திருமலையப்பனை ஆழ்வார்களில், மதுர கவியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார் நீங்கலாக, மற்ற ஆழ்வார்கள் அனைவரும் பாடிப் பரவி உள்ளனர். அதிலே முதல் திருவந்தாதி பாடிய, முதல் ஆழ்வார்களில் முதல்வரான பொய்கை ஆழ்வார், மிக அருமையான ஒரு பாசுரத்தைப் பாடியுள்ளார். முதல் திருவந்தாதியில் திருமலை குறித்த முதல் பாசுரம் இது. *"வேங்கடம் மேய விளக்கு"* என்று எம்பெருமானின் பெருமையெல்லாம், அவன் எழுந்தருளி இருக்கக்கூடிய திருமலைக்கும் உண்டு என்பதை எல்லா ஆழ்வார்களும் பாடிப்பரவி இருக்கிறார்கள்.

திருவேங்கட மலை இரண்டு காரியங்களைச் செய்கிறது. ஒன்று, எரிகின்ற ஒரு திரியை அணைக்கிறது. இரண்டாவது காரியம் இன்னொரு திரியைத் தூண்டுகிறது. இந்த இரண்டு திரிகளும் ஒரே நேரத்தில் செயல்படுவது கிடையாது. இருட்டும் வெளிச்சமும் ஒரே நேரத்தில் இருப்பதற்கான வழி இல்லை. வெளிச்சம் இல்லாத நிலை இருட்டு. இருட்டு நீங்கிய நிலை வெளிச்சம்.

நம்முடைய கவலைகளுக்குக் காரணம், நம்முடைய வினைகள் பற்றி எரிந்துக் கொண்டே இருப்பதுதான். அந்த வினைகள் எரிவது அடங்கினால் தான், நம்முடைய பாவங்கள் நீங்கி, மகிழ்ச்சியோடு இருக்க முடியும்.

அந்த வினைத்திரியை எப்படி அடக்குவது? இருட்டை விலக்க வேண்டும் என்று சொன்னால் வெளிச்சம் வேண்டும் அல்லவா?

நம்முடைய வினைகள் எல்லாம் போக வேண்டும். பாவங்கள் எல்லாம் நசிக்க வேண்டும் என்று சொன்னால், மனதிலே இன்னொரு விளக்கு எரிய வேண்டும்.

அந்த விளக்கு எரிய, திருப்பதிக்குச் செல்ல வேண்டும். அந்த ஏழுமலையானைத் தரிசிப்பது கூட அப்புறம் தான். அந்த மலையைப் பார்த்தாலே போதும். அந்த மலையானது சுட்டெரிக்கும் வினைத் திரியை அணைத்துவிட்டு புண்ணியமான மனத் திரியைத் தூண்டி விடும். இதைத்தான் பொய்கை ஆழ்வார் மிக அற்புதமான ஒரு பாசுரத்தில் சொல்லுகின்றார்.

*"எழுவார் விடை கொள்வார் ஈன் துழாயானை*
*வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார்*
*வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்*
*மனச் சுடரைத் தூண்டும் மலை"*

–முதல் திருவந்தாதி.26

## எழுவார்

சிலர் பகவானிடம் தங்களுக்கு வேண்டியதை கேட்டு வருவார்கள். கேட்டது கிடைத்தவுடன் எழுந்து போய் விடுவார்கள். பட்டம், பதவி, செல்வம் என நிலையற்ற சில விஷயங்களுக்காகப் பக்தி செய்வோர், தேவை பூர்த்தியானவுடன் போய் விடுவர். மனிதர்கள் என்ன? இந்திரனே அப்படித் தானே. இந்திரப் பதவிக்காக பணிந்தவன் பதவி கிடைத்தவுடன் அவ்வளவுதான் காரியம் முடிந்தது என்று எழுந்து விட்டான். பகவானை மறந்து விட்டான்.

*''பொருள் கை உண்டாய் செல்லக் காணில் போற்றி என்று ஏற்று எழுவர்''* (திருவாய்மொழி 9–1–3) என்று இவர்களை நம்மாழ்வாரும் குறிப்பிடுகிறார். இவர்களை ஆர்த்தன் என்று பகவத் கீதை குறிப்பிடுகிறது. *''சதுர்விதா பஜந்தேமாம் ஜனா: ஸுக்ருதி னோர்ஜூந ஆர்த்தோ ஜிக்ஞாஸுர்த்தார்தீ க்ஞாநி ச பரதர்ஷப''* – பகவத் கீதை 7.16.

## விடை கொள்வார்

சில பேர் சொல்லிக் கொண்டு போவார்கள். "எனக்கு வேண்டியதெல்லாம் நீ தந்திருக்கிறாய், நன்றி" என்று சொல்லிக் கொண்டு வருவார்கள். போய் விட்டு வருகிறேன் என்று விடை பெற்றுச் செல்வார்கள். இது மேலோட்டமான விளக்கம். ஆழமான விளக்கம். இது கைவல்யார்த்திகளைக் குறிக்கிறது.

அழிகின்ற செல்வத்தில் விருப்பமில்லாது சுய அனுபவ வேட்கையால் (கைவல்ய ருசியால்) பகவானிடம் வரம் கேட்டு வரும் பக்தர்கள் உண்டு. அவர்களை விடை கொள்வார் என்ற பதத்தால் குறிப்பிடுகிறார். "உன்னை அனுபவித்து இருக்கப் பண்ணுமதும் வேண்டா– எங்களை நாங்களே அனுபவித்து இருக்க அமையும் என்று ஆத்ம அனுபவத்தைக் கொண்டு போவார்" என்பது விடை கொள்வாருக்கு வியாக்கியாதாக்கள் சொல்லும் விளக்கம்.

## ஈன் துழாயானை வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார்

வேறு சிலரோ, தமக்கு எந்தத் தேவையும் இல்லை. நன்றியும் இல்லை. பக்தி மட்டும் தான் மனதில் இருக்கும். இறைவனைத் தொழுவது மட்டும் தான் அவர்களுக்கு உத்தேச்யம். அதற்குப் பிரதி பலனாக ஒன்றையும் கேட்பது இல்லை. பெருமாளுக்குப் பிடித்த செல்வமான திருத்துழாய் மாலையாலே அலங்காரப் பிரியனான எம்பெருமானை அனுபவிப்பார்கள். பெருமாள் வந்து நின்ற இடமான திருமலை விண்ணோர்களான நித்ய சூரிகளுக்கும். மண்ணோர்களான சம்சாரிகளுக்கும் அனுபவிக்கத் தகுந்த இடமல்லவா. இந்த அனுபவத்தைத் தேடி திருமலைக்கு வந்தால் பெருமாளைப் பிரிய நினைக்கவே மாட்டார்கள். பிரிந்தாலும் உயிர் தரிக்க மாட்டார்கள்.

வழுவா வகை என்பது குற்றமில்லாத வகை என்று பொருள். எது குற்றம்? பகவானை வணங்கி ஒரு பலனை எதிர்பார்ப்பது குற்றம். திருமலைக்கு வரும் மூன்றாவது வகையினர் எந்தப் பலனையும் எதிர்பார்க்காது பகவானை நினைத்து உருகி எப்போதும் வணங்குவார்கள். (வைகல் தொழுவார்).

## வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடமே

வினை என்னும் தீயை அணைக்கும் மலை திருவேங்கட மலை. திருமலையில் காலடி எடுத்து வைத்தாலே பாபம் போய் விடும். வினைகள் தீர்ந்து விடும்.

## வானோர் மனச்சுடரைத் தூண்டும் மலை

பக்தி என்ற மனச்சுடர் தூண்டப்பட்டு விடும். எதை எதையோ நினைத்துக் கொண்டு வரும் பக்தர்கள் திருமலையில் எல்லாவற்றையும் மறந்து கோவிந்தா! கோவிந்தா!! என்று ஒரே குரலில் கோஷமிடுவதை காண்கிறோம் அல்லவா. சம்சார வினைச் சுடர் அணைந்து பக்தியும் ஞானமுமாகிய மனச் சுடர் பிரகாசிக்கும்.

வானோர் மனச்சுடரை என்பதற்கு இன்னொரு பொருள். பரமபதத்தில் இருக்கும் நித்ய சூரிகள் கூட, திருமலையிலேயே கைங்கர்யம் செய்து கொண்டு இருந்து விடலாம் என்ற ஆவலைத் தூண்டும் சிறப்பு திருமலைக்கு உண்டு என்பது...

வினையான சுடரை அவிப்பவனும், அவன் மனதில் உள்ள சுடரைத் தூண்டி அதைப் பிரகாசிக்கச் செய்வதும் அவன். இது நடப்பது திருமலையில் என்பது பொய்கை ஆழ்வாரின் அனுபவம்.

பாசுரம் படிப்போம்...






# மதுர கவியும் மதுரகவிதாசனும்

– திரு. ஏ.வி. ரங்காசாரி,சிதம்பரம், 04144-220425

சித்திரையில் சித்திரை நந்நாளில் அவதரித்தவர் மதுர கவியாழ்வார். இவர் கண்ணி நுண்சிறுதாம்பு என்னும் பிர பந்தத்தை அருளினார். நம்மாழ் வாருக்கு சீடராய் இருந்தார்.

**மதுரகவி கண்ட மாறன் :**

மன்னுபுகழ் மதுரகவிக ளும் "மாதவனே மகிழ்மா மார்பி னனாக வந்துதித்துள்ளான். தனக்கு ஞானோபதேசம் செய்ய" என்று மகிழ்ந்து அப் பெருமானின் நீல நெடுமுகில் போல், திருமேனியையும், நான்கு திருக்கரங்களில் இரண் டையும் உந்தி மேல் படைத்த நான்முகனையும் இவரிடம் காணாது,

*"கரிய திருமேனி எங்கே? கை நான்கில் இரண்டெங்கே பெரிய தொரு உந்திமலர் பெற்ற பிரமன் எங்கே"* என்று கேட்டார். *"அகலகில்லேனிறையுமென்று அலர் மேல் மங்கையுறை மார்பனே"* அந்தண் குருகூர்ச் சடகோபனாக அவதரித்திருக்கும் அவனது அழகிய வலமார்பி னில் வாழும் அலர்மேல் மங்கையைக் காணாமல் ஆகத்தில் வாழும் அலர் மேல் மங்கை எங்கே என்று வினவினார். ஆனால் சடகோபரும் சோதி வாய் திறக்கவில்லை.

பாமருவுலகளந்த பற்பநாபனே பராங்குசனாக அவதரித்துள்ளான் என்றுணர்ந்த மதுரகவிகள் ஆழ்வார் திருவடித் தாமரைகளை வணங்கி, *"பண்டு அகிலம் ஏழும் பரந்தளந்த தாள் இதுவோ?"* என்று கேட்டார். திருவடி முதல் திருமுடி வரை தொழுது முன்பு பிரளய காலத்திலே உலகங்களை வயிற்றில் அடக்கிக் கொண்டு தான் ஒரு ஆலந்தளிரில் அடங்கி விட்டது போல் மாமாயம் செய்யும் மாயப் பிரானே மாறனாக இந்த வடிவில் இங்கே வந்து நமக்கருள் செய்யக் காத்திருக்கிறான் என்று கருதினார்.

**மதுரகவி காட்டும் நல்வழியான தொல்வழி :**

மதுரகவிகள் தாம் உபதேசம் பெற்ற திவ்யப் பிரபந்தங்களைக் கைத்தாளமெடுத்து பண்ணிசையோடு எப்போதும் பாராயணம் செய்து கொண்டு "தேவுமற்றறியேன்" என்று திருக்குருகூர் நம்பிக்கு பிரதான சிஷ்யராய் பரதாழ்வார் பணிவிடை புரிந்தொழுகின சத்ருக்கனாழ் வானைப் போல் பகவத் பக்தியிலும் பாகவத ப்ரதி பத்தியே பரமாநுஷ் டானமாகத் தலைக்கொண்டு ஆழ்வார் விஷயமாக "கண்ணிநுண் சிறு தாம்பு" என்கிற திவ்ய பிரபந்தத்தைப் பாடி உபகரித்தார். ஆழ்வார் பகவத் பத்தி என்கிற முதற்படியில் நின்றவர். மதுரகவிகளோ" பாகவத பக்தி என்ற கடைசிப் படியில் நின்றவர்.

மதுரகவிகள் நம்மாழ்வாருடைய அருளி செயல்களை ஆழ்ந்து நோக்கி பாகவத பக்தியே மிகச் சிறந்ததென்கிற தத்துவப் பொருளை உறுதியாகக் கைக்கொண்டவர். ஆழ்வார் பிரதம பிரபந்தமாகிய திரு விருத்தத்தில் *"திருமால் திருப்பேர் வல்லார் அடிக்கண்ணி சூடிய மாறன்"*

என்றருளிச் செய்து சரம ப்ரபந்த மாகிய திருவாய் மொழி முடிவில் வந்தவ ரெதிர் கொள்ள மாமணி மண்டபத்து அந்த பேரின் பத்து அடியரோடு இருந்தமை என்று தாம் திருநாட்டின் பாகவத கோஷ்டியில் கூடியிருந்து குளிரப் பெற்றதையே பேனாக, அருளிச் செய்து தலைக்கட்டினார். மதுரகவிகள் பாகவத நிஷ்டைக்கு மேற்பட்டதொன்று கிடையாது என்று துணிந்தவர். அதுவே தொல்வழி அதற்கு நல்வழி.

**ஸ்ரீமதுரகவி தாஸர் ஸ்ரீஅநந்தாழ்வான் :**

மேல் நாட்டில் மைசூர் அருகில் காவேரிக் கரையில் உள்ள சிறுபுத்தூரில் பாரத்வாஜ கோத்திரத்தில் உதித்த ஸ்ரீவைஷ்ணவரான கேசவாசாரியாருக்கு சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்திரத்தில் தம்முடைய அம்சமாக அவதரித்தார். இவர் இயற்பெயர் அனந்தன். ஆசாரியர் ஆணைப்படி திருமலைக்குச் சென்று பூந்தோட்டம் உண்டாக்கி, புஷ்ப கைங்கர்யம் செய்ய துணிந்தபோது எம்பெருமானாரால் “ஆண் பிள்ளை” என்று விருது சூட்டப்பட்டார். அது முதல் இவர் அனந்தான் பிள்ளை என்று பிரசித்தரானார்.

திருமலைக்கு வந்து எம்பெருமானாரிடம் தாம் வாக்களித்தப்படி புஷ்பமாலை தொடுக்கும்போது திருவேங்கடமுடையான் அழைத்தார். மாலை கட்டிக் கொண்டிருந்ததால் அப்போதே செல்லாமல் மாலை கட்டி முடித்து மாலையுடன் சென்றார். அப்போது பெருமாள் கேட்டதற்கு நம்மாழ்வாரைத் தவிர வேறு மற்றறியேன் என்றிருந்த மதுரகவியாழ்வாரைப் போல ஆசார்யராகிய எம்பெருமானாரிடம் ஊன்றிய அடியேனை மதுரகவிதாஸன் என்று நினைக்கக் கடவீர் என்று தெரிவித்தார்.

ஏகாதசி தொடங்கி திருவாய் மொழியையும் சாற்றி மறுநாள் அனந்தாழ்வான் திருமலையிலே மதுரகவிகளைப் போலே கண்ணிநுண் சிறுத்தாம்பை அனுசந்தித்துக் கொண்டு சரம பர்வத்திலே நின்று மதுரகவிதாஸர் என்ற திருநாமம் பெறுகையாலே அவர் உகந்து அனுபவிக்கும் கண்ணிநுண் சிறு தாம்பை சந்நிதியிலே அனுசந்திக்கும்படி நியமித்து





என்று திருமலை ஒழுகிலும் உள்ளது.


கீழ்த்திருப்பதி கோவிந்த ராஜப் பெருமாள் சந்நிதியில் மதுரகவிகளும் மதுரகவி தாஸ ரான அனந்தாழ்வானும் ஒரே கருவறையில் எழுந்தருளியுள் ளமை அனந்தாழ்வானுடைய மதுரகவி தாஸத்வத்தை நிலை நாட்டும் ப்ரத்யக்ஷ ப்ரமாண மாகும்.

அனந்தாழ்வான் திருமலையில், “இராமாநுஜன்” எனப் பெயர் சூட்டிய விசாலமான ஒரு நந்தவனமும் அதற்கு ஓர் ஏரியும், நந்தவனத்தின் நடுவில் ஓர் நடை பாதையும் உண்டாக்கினார்.

பெருமாளுடைய கோயிலில் கோபுரத்தோடு கூடிய மதில் சுவர்களையும் அதற்குள் பூங்கிணற்றின் அருகில் பூமாலைக் கட்டும் யமுனைத் துறைவர் என்ற மண்டபத்தையும் கட்டி வைத்து திருமலையப்ப னுக்காக புஷ்ப கைங்கர்யங்களைச் செய்து வந்தார்.

தினமும் இராமாநுஜ நந்தவனத்திலிருந்து புஷ்பங்களைக் கொணர்ந்து மாலைகளை யமுனைத் துறை மண்டபத்திலே தொடுத்து, மாலைகளைப் பூக் கூடைகளிடையே வைத்து தம்மூக்கையும் வாயையும் துணியால் மூடிக் கட்டிக் கொண்டு, பூக்குடலைகளைத் தலையிலே வைத்துக் கொண்டு, மிக்க பக்தியுடன் குடை சாமரம் மங்கள வாத்தியங்களுடன் அம் மண்டபத்திலிருந்து கோயிலை வலம் வந்து பெருமாள் திருவாராதன சமயத்தில் தினமும் பெருமாளுக்கும் சாத்தச் செய்து திருவேங்கடவனை சேவித்துக் கொண்டிருந்தார்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 56



### இடமிருந்து வலம்

1. விஷ்ணு ஸ்ரீராமனாக அவதாரம் செய்த போது ....(5) சீதையாக அவதரித்தார்.
2. உன்னி கிருஷ்ணன் உள்ள திருத்தலம்....(5)
4. நவநரசிம்மர் உள்ள இடம்.....(5)
7. பிரதிவாதி பயங்கரம் அண்ணனால் எழுதப்பட்டது.....(6)
8. விராட் புருஷன்....(5)
9. ....(7) தலைமையில் கிருஷ்ணருக்கு பெயர் சூட்டு விழா நடந்தது.
12. கேரளாவில் அர்ச்சுனன் இவருக்கு கோயில் நிறுவினார்....(5)
13. கிருஷ்ணரின் ஜாதக விபரம் இந்த நூலில் உள்ளது....(5)

### வலமிருந்து இடம்

5. நைமிசாரண்யம் தலத்தில் வீற்றிருக்கும் தாயார்....(3) லக்ஷ்மி.
11. துரியோதனின் சகோதரி.....(4)
14. மகாபலி நடத்திய யாகம்....(5)
15. லட்சுமி அம்சமான வில்வ மரத்தை ....(6) என்று அழைப்பர்.
17. பரசுராமரின் தந்தை....(5)
22. நம்மாழ்வார் அருளியது....(6)
23. திருச்சாளகிராமத்தில் உள்ள தீர்த்தம்.... (2) ஆறு.

### மேலிருந்து கீழ்

03. திருமலையப்ப ஸ்வாமி உள்ள திருத்தலம்...(5)
04. ஆண்களுக்கு மட்டுமே உரித்தான வழிபாட்டு முறை.....(11)
06. மூன்றடி நிலம் கேட்டவர்....(4)
10. ஆண்டாள் மாலையிட்டு அழகு பார்த்த பெருமாள்....(7)

### கீழிருந்து மேல்

11. ஆலிலையில் வடபத்ரசாயி.....(6)
13. பாற்கடலைக் கடையும்போது வெளிவந்த மரம்....(7)
16. தேவகி-வசுதேவருக்கு கிருஷ்ணர்....(5) மகனாக அவதரித்தார்.
18. .....(5) பாம்பு வடிவில் கிருஷ்ணரை கொல்ல வந்தான்.
19. உலகளந்த பெருமாளோடு மகாபலி, பிரகலாதன் உள்ள திருத்தலம்....(7)
20. திருநீர்மலையில் நின்ற கோலத்தில் உள்ள பெருமாள்....(10)
21. சத்திய லோகத்தில் உலகளந்த பெருமாளுக்கு அபிஷேகம் செய்தவர்....(4)

தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார்,
சென்னை, 8124930259

புதிருக்கு விடை அறிய
22ம் பக்கம்
பார்க்கவும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்
தலைக்கவசம்! உயிர் கவசம்!!

திருப்பதி – திருமலை மலைவழிச்சாலையில் இருசக்கர வாகங்களில் பயணம் செய்யும் பக்தர்கள் மலையை ஏறும் போதும், இறங்கும் போதும் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிதல் அவசியமாகும்.
வாகனம் மலைவழிச் சாலையில் ஏறும் பொழுது 28 நிமிடமும் மலைவழிச் சாலையில் இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக சென்றால் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.
– கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புத் துறை

# ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

**திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,**
**சென்னை.**

ஆபதா$_3$ம் அபஹர்தாரம் தா$_3$தாரம் ஸர்வஸம்பதா$_3$ம் | லோகாபி$_4$ராமம் ஸ்ரீராமம் பூ$_4$யோ பூ$_4$யோ நமாம்யஹம் ||
ஸ்ரீராமராமராமேதி ரமே ராமே மநோரமே | ஸஹஸ்ரநாமதத்துல்யம் ராமநாம வராநநே ||

ஸ்ரீமந்நாராயணனின் எண்ணிறந்த அவதாரங்களுள் ஒழுக்கம், சத்தியம், கருணை, பொறுமை, வீரம், சாந்தி, மனித நேயம், தானம், நேர்மை, தூய்மை ஆகிய பண்புகளால் மனித இனத்துக்கே ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்த அவதாரம் ஸ்ரீராமாவதாரம். சீதாராமன் வாழ்ந்து காட்டிய முறையை உணர்ந்து ஸ்ரீராமனின் பாதையை – அதாவது அவனது சீரிய பண்புகளை – பின்பற்றுவோமானால் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் செழிப்பும் சாந்தியும் பக்தியும் மலரும்.

கலியுகத்தின் இன்னல்கள் நம்மை பாதிக்காமல் இருக்க ஒரே வழி, நல்ல பண்புகளைக் கடைப்பிடித்து பக்தியோடு இருத்தலே. நாம் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளை ஸ்ரீராமாயணத்தின் தொடக்கத்தில் வால்மீகியும் நாரதரும் விளக்குகிறார்கள்.

முன் ஒரு நாள் தன் ஆச்ரமத்திற்கு வந்த தேவ ரிஷியான நாரதரிடம் வால்மீகி முனிவர்,

(ஸ்ரீராமாயணம் – பால காண்டம்–1, சுலோகம்–2,3,4 –ல் )


“கோந்வஸ்மின் ஸாம்ப்ரத$_3$ம் லோகே கு$_3$ணவான் கச்ச வீர்யவான் |
த$_3$ர்மஜ்ஞச்ச க்ருதஜ்ச்ச ஸத்யவாக்யோ த்$_3$ருட$_4$வ்ரத: ||
சாரித்ரேண ச கோ யுக்த: ஸர்வபூ$_4$தேஷு கோ ஹித: |
வித்$_3$வான் க: க ஸ்ஸமர்த$_2$ச்ச கச்சைக ப்ரியத$_3$ர்சந: ||
ஆத்மவான் க: ஜிதக்ரோத$_2$:த்$_3$யுதிமாந் கோऽநஸூயக: |
கஸ்ய பி$_3$ப்$_4$யதி தே$_3$ வாச்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே$_3$ ||”

என்று வினவினார்.

நற்குணமுடையவன், வீரன், தர்மமறிந்தவன், செய்நன்றி உள்ளவன், உண்மையே உரைப்பவன், உறுதியான முடிவு எடுப்பவன், நன்னடத்தையுள்ளவன், எவ்வுயிர்க்கும் நன்மையையே நினைப்பவன், பேரறிவாளன், திறமைமிக்கவன், எப்போதும் காண இனிமையானவன், ஆத்ம தத்வத்திலேயே என்றும் நிலைநிற்பவன், கோபத்தை வென்றவன், ஒளி மயமானவன், பொறாமை அற்றவன், தேவர்களும் நடுங்கும் சினம் உடையவன்– என்று 16 நற்பண்புகளை அடுக்கி, இவையனைத்தையும் உடைய ஒருவன் யார்? என்று வினவினார். இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ஸ்ரீராமனே அனைத்து, மங்களகரமான குணங்களும் நிறைந்தவர் என்று நாரதர் விடையளித்தார். ஸ்ரீராமனின் வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்வும் இக்குணங்களை உலகோர்க்கு உணர்த்தும் படியே அமைந்தது. ஸ்ரீசீதா–ராமர்களின் வாழ்க்கையிலிருந்து 52 நிகழ்வுகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் மூலம் இக்குணங்களை விளக்கி உள்ளோம்.



நற்பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள விரும்பும் நாம் அனைவரும் இக்கதையை வாரத்துக்கு ஒன்றாக குடும்பத்தோடு – முக்கியமாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களோடு படித்து உணர்ந்து நல்லொழுக்கங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.




# 1. குணவான்

*நற்குணங்களில் தலைசிறந்த ஸௌசீல்யம், அதாவது உயர்வு தாழ்வு கருதாமல் எளிமையாகப் பழகுதல் எனும் நற்பண்பை உடையவன்.*

### 1.1. ஸ்ரீராம அவதாரம் :

ராவணன் எனும் அரக்கர் தலைவனின் தொல்லை தாளாமல் தேவர்கள் திருமாலிடம் சென்று தங்களைக் காக்குமாறு வேண்டினர். இருந்த இடத்திலிருந்தே ராவணனைக் கொல்லும் வல்லமை படைத்த திருமால், அப்படிச் செய்யாமல், மனித உருவத்தில் அயோத்தியில் தசரத மன்னனுக்கு மகனாக த்ரேதாயுகத்தில் பிறந்தார்.

அறுபதினாயிரம் ஆண்டுகள் புத்திரபேறு இல்லாமல் துன்புற்ற தசரதன், புத்திரகாமேஷ்டி யாகம் செய்ய, அதனால் ஸ்ரீராமன், பரதன், லக்ஷ்மணன், சத்ருக்நன் ஆகிய நால்வர் பிறந்தனர்.



துன்பமே அண்டாத இன்ப மயமான வைகுந்தத்தில் ஆனந்தமாக வஸிக்கும் பெருமான், துயரம் நிறைந்த இந்த பூவுலகத்தில் பிறந்து, பண்புகளால் தாழ்ந்த நம்மிடையே இரண்டறக் கலந்து 11,000 ஆண்டுகள் வாழ்ந்தார். நம்மையும் உயர்த்தினார்.

நாம் யாராவது நம் நிலையிலிருந்து சற்றுக் குறைந்தவர்களோடு சமமாகப் பழகுவோமா? இனி யாவது செய்வோம். அதுவே உண்மையான உயர்வு!

### 1.2 நாடு புகழும் பரிசு :

ஸ்ரீராமனுக்குச் சளைத்தவளா சீதாப்பிராட்டி? அயோத்தி அரண்மனையில் ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடக்கிறது. அப்போது "அரியனை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த..." என்று கம்பர் வர்ணித்த படி அனைவரும் ஆவலோடு தொண்டாற்றினர். அனுமன் சிங்காதனத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருந்தார். அவர் தனக்குச் செய்த பேருதவியை நினைத்த சீதை அவருக்கு இந்த சமயத்தில் ஏதாவது பரிசளிக்க வேண்டும் என்ற உறுதி கொண்டு, இந்திரன் தனக்கு அனுப்பியிருந்த முத்து மாலையைக் கைகளில் ஏந்திக் கொண்டு தன் அரியாஸனத்திலிருந்து எழுந்து பல அடிகள் நடந்து வந்து அனுமனை அணுகி, இராமனிடம் கண் ஜாடையால் அனுமதி பெற்று, அனைவரும் வியக்க அம் மாலையை அனுமனுக்குப் பரிசாக அளித்தாள்.

ஒரு ராணி தன் தொண்டன் இருக்குமிடம் சென்று பரிசளித்துப் பார்த்திருக்கிறோமா? யாருக்கும் மதிப்பளித்துப் பழகுவதே ஸௌஸீல்யம். கருத்து : பிறப்பு, கல்வி, செல்வம் மற்றும் அழகு ஆகியவற்றைப் பார்த்து யாரையும் எடை போடா



மல், அவர்களது உயர்ந்த உள்ளத்தைப் பார்த்து இனிமையாகப் பழகுவதே ஸௌளஸீல்யம் எனும் சிறந்த பண்பு.

**1.3 குகனொடும், விபீடணனொடும் தோழமை :**

ஸ்ரீராமபிரான் நாடு துறந்து காட்டை அடைந்த போது முதலில் கங்கைக் கரையில் உள்ள ச்ருங்கி பேரபுரம் எனும் ஊரை அடைந்தார்.

அங்கு வேடர் தலைவனாய் இருந்த படகோட்டியான குகன் அறிவிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்தவனாக இல்லா விடினும் உள்ளன்போடு தேன், தினை மாவு, கனிகள் ஆகியவற்றை இராமனுக்கு சமர்ப்பித்தான்.

ஸ்ரீராமன் சக்ரவர்த்தித் திருமகனாக இருப்பினும் ஒரு வேடனான குகனை ஏற்று, அவனுடைய பக்தியை மெச்சி, தனக்கு உற்ற தோழனாகவும் உடன் பிறந்த தம்பியாகவும் கொண்டு, அன்போடு கலந்து மகிழ்ந்தார். இதே போல் குரங்கான சுக்ரீவனையும், தன் மனைவியைப் பிரித்த கொடியவனான ராவணனின் தம்பியான அரக்கன் விபீஷணனையும், தனக்குத் தம்பியாக ஏற்று, தனது உடன் பிறந்தோர் அறுவர் என அறிவித்தார்.

*“குகனொடும் ஐவரானோம் முன்பு: பின் குன்று சூழ்வான் மகனொடும் அறுவரானோம்: அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானோம்”* என்று இராமன் விபீஷணனிடம் உளமுருக உரைப்பதை கம்பர் விவரிக்கிறார்.

ஒருவனது உடலையும் உடையையும் கொண்டு மதிப்பிடாமல் இராமனைப் போல் அவனது நல்ல உள்ளத்தையே நோக்க வேண்டும்.

*வளரும்...*

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத்துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

சென்ற இதழின் தொடர்ச்சி...

நாட்டை ஆண்டு வந்த அச்யுத ராயன் கைங்கர்யமாக இன்னொரு உறியடி மண்டபம் கட்டுவித்தார். பாண்டிய மன்னனான முதலாம் சடைய வர்மன் சுந்தர பாண்டியனுக்கு (கி.பி. 1250–1284) "ரங்க பூபால ராயன்" என்றதொரு விருதுப் பெயர் உண்டு.

அவன் வடக்கு நோக்கி படையெடுத்துச் செல்கையில் வழியில் பல மன்னர்களை வென்று திருமலையிலே திருவேங்கடமுடையானை சேவித்து அந்தப் புண்யக்ஷேத்திரமான திருமலையிலே ஜெய ஸ்தம்பமும் நாட்டினார். அந்த இடத்திலே விஷ்ணு பிரதிஷ்டை பண்ண வேண்டுமென்று பெரியோர்களிடம் அனுமதி கேட்க, அவர்கள் திருமலையாகிய இந்த க்ஷேத்திரத்திலே மானுடர்களால் தெய்வ பிரதிஷ்டை செய்யக் கூடாது என்று தெரிவித்தனர்.

"சேஷாசலஸ்ய பரித: க்ரோசமாத்ரம் து பூதலம்।
சேஷாசலைகதேசேந ப்ரதிதம் முநிஸேவிதம் ॥"

என்று ஸ்காந்தப்புராணத்திலே க்ஷேத்ர மஹாத்மியத்திலே ஸுவர்ண முகரீ மஹாத்மியத்திலே, திருமலையைச் சுற்றிலும் வளைத்து ஒரு குரோசமாத்ர (இரண்டேகால் மைல் தூரத்தில்) பூமி, திருமலை தானே என்றிருக்கையாலே, திருமலையடிவாரத்திலே விஷ்ணு பிரதிஷ்டையைப் பண்ணலாம் என்று அவர்கள் இசைவு தந்திட, பாண்டியனுங்கேட்டு மகிழ்ச்சியுற்றவனாய், திருமலை அடிவாரத்திலே வந்து ஒரு குரேசமாத்ரத்துக்குள்ளாக ஒரு ஸ்தலத்திலே கோயிலைக் கட்டித் தனக்குப் பிரியமான கோதண்டதாரியான சக்ரவர்த்தித் திருமகனை, இளையப் பெருமாள், பிராட்டியாரோடுங்கூட மேற்கே திருமுக மண்டலமாகவும் திருவேங்கடமுடையானுக்கு அபிமுகமாகவும் (நேர்முகமாகவும்) திருப்பிரதிஷ்டை பண்ணியருளினான்.

இக்காலத்தில் கொண்டாடப்பட்ட திருவிழாக்கள் (உத்ஸவங்கள்) பற்றிய கல்வெட்டுகள் : திருமலையில் புரட்டாசித் திருநாள் முதன் முதல் பிரம்ம தேவனால் தொடங்கப்பட்டதென்பது புராணங்களால் அறியக் கிடக்கின்றது. திருவேங்கடமுடையானாகிய மூல மூர்த்தி, தானே தோன்றியவர் என்று நூல்கள் கூறுகின்றன.

பல்லவர் காலத்துக்கு முன், அப்பெருமானது கோயில் சிறிய அளவுடையதாய் இருந்தது. ஊரும் விரிவாக இல்லை.

# மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
ஸ்ரீ.உ.வே.அ.கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி,
திருவரங்கம்,
98842 89887.





அக்காலத்தில் பிரம்மோற்சவம் எவ்வாறு நடைபெற்று வந்தது என்று அறிவதற்கு ஆதாரம் இல்லை. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில், சாமவை என்னும் பல்லவ அரசி மணவாளப் பெருமாள் என்னும் வெள்ளி விக்கிரகத்தை அமைத்துப் புரட்டாசித் திருவிழாவிற்காகத் திருச்சுகனூரில் உள்ள நிலங்களை அளித்தாள்.

அதன் பின் புரட்டாசித் திருவிழாச் சிறப்புற நடைபெற்றது. திருமலை ஒழுகின் படி அவ்விழா, திருச்சுகனூரிலே சில காலம் நடந்திருத்தல் வேண்டும். அஃது இராமாநுசர் காலத்தில் திருமலையில் நிகழ்ந்து வந்தது.

புரட்டாசி மாதத்தில் அன்றி, வைகாசி, மார்கழி, நீங்கலாக மற்றைய பத்து மாதங்களிலும், ஒவ்வொருவரால் இத்திருவிழா நடத்தப்பட்டதாகக் கூறப்படினும், புரட்டாசித் திருவிழாவே முதன்மை பெற்றது.

கல்வெட்டுகளில் இவ்விழாக்கள் திருக்கொடித் திருநாள் எனப்படுவதால், ஒவ்வொரு மாதமும் விழாவின் போது கொடி ஏற்றுதல் உண்டு என்று தெரிகிறது (Ins.Vol.IV.129)".......

தம்முடைய உபயமாக ஆனி மாதத்தில் திருவோண நட்சத்திரம் அங்குரார்ப்பணமும் சதயம் திருமுளையும் தம்முடைய நட்சத்திரம் மிருகசீர்ஷம் தீர்த்த வாரியும் விடாயாற்றி வரைக்கும் நாள் 13–க்கு திருக்கொடி திருநாள்" என வருவதால் புரட்டாசியைத் தவிர மற்றைய மாதங்களில் திருவோணத்தில் தீர்த்தவாரி நடக்க வேண்டும் என்னும் நியதி இல்லை என்க.

ஊஞ்சல் விழா, கோடைத் திருநாள், திருப்பள்ளி ஓடத் திருநாள் முதலாகப் பல விழாக்களும் அக்காலத்தில் நடந்தன. அத்யயனோத்ஸவமும், அதன் இறுதியில் தண்ணீரமுது வழி திருத்து விழாவும் இப்போது போலவே அப்போதும் நடை பெற்றன.

அத்யயனோத்ஸவத்தில் கடை கொழி நாச்சியார் திருவத்யயனம் என்பதொன்று நடந்து வந்ததாக (Vol.II.No.92.27-9-1491) அறிகின்றோம். அதன் வரலாறு தெரியவில்லை. திருமலை ஒழுகிற் குறிப்பிட்டபடியே திருவத்யயனத்தில் இயற்பா முதலாக நூற்றந்தாதி ஈறாக இருபத்து மூன்று நாட்கள் திவ்வியப் பிரபந்தம் ஓதப்பட்டு வந்ததென்பது கி.பி. 1485–ல் ஏற்பட்ட (Vol.II.83) கல்வெட்டினால் தெரிகிறது.

புஷ்பயாகம் என்னும் விழா, விடாயாற்றி முன் நடந்து வந்தது. அன்று உற்சவ மூர்த்தியைத் திருமேனி முழுவதும் பூக்களால் அலங்கரித்துப் பன்னிரண்டு முறை திருவாராதனம் நடத்துவர். இப்போது அவ்விழா நடைபெறுவதில்லை.

திருவேங்கடமுடையானுக்கு கல்யாண உற்சவத்தை (வைவாஹிகோத்ஸவம்) ஐந்து நாள் செய்யுமாறு, பெரிய திருமலை ஐயங்கார் குமாரரான சின்னண்ணா என்னும் திருவேங்கட நாதர் கி.பி. 1546–இல் ஏற்பாடு செய்து,

அதன் செலவுக்காக 120– ரேகை கெட்டிப் பொன் வருவாயுள்ள மல்லவரம் என்னும் ஊரை நன்கொடையாக அளித்தார். இப்போது இவ்விழா நடக்காவிடினும், இக்கல்யாண விழா திருமலையில் ஏறக்குறை நாள்தோறும் அன்பர்களால் நடத்தப்பட்டு வருகின்றது.

திருமலையில் நடக்கும் விழாக்கள் எல்லாம் பண்டைக் காலத்து முறைப்படியே இன்னும் நடந்து வருகின்றன. திருப்பதி வரலாறுகளிற் காண்க.

தொடரும்...





# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## पञ्चमः पाठः பாடம்-6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| यः | = எவன் (யாராவது) | अन्यः | = மற்றவர் | स्वः | = தான் |
| प्रभृति | = துவங்கி, முதற்கொண்டு | श्वः | = நாளை | ह्यः | = நேற்று |
| सन्तु | = அவரை இருக்கவிடு | स्त | = இருங்கள் | असाम | = எங்களை இருக்கவிடு |

### வினாக்கள்

१. वयम् अद्यप्रभृति तत्र स्मः।
२. यूयं श्वः प्रभृति अत्र स्त।
३. ह्यः अहं तत्रासम्।
४. अन्यः तत्र नासीत्।
५. यः तत्रासीत् सः अहम्।
६. त्वं कः?
७. अहम् एकः।
८. कदा त्वं तत्रासीः?
९. ते ह्यस्तत्रासन्।
१०. तत्र ह्यः के आसन्,
अद्य प्रातः प्रभृति के सन्ति?

1. நேற்று நீ அங்கு இல்லையா?
2. நான் அங்கு இல்லை.
3. நாங்கள் அங்கு இருக்கின்றோம்.
4. அவர்கள் இங்கு இருக்கின்றார்கள்.
5. நீங்கள் இன்று முதற்கொண்டு எங்கு இருந்தீர்?
6. நாங்கள் இங்கு இருந்தோம்.
7. நீங்கள் அங்கு இருந்தீர்.
8. இவர்கள் எங்கு உள்ளனரோ!
9. அவர்கள் அனைவரும் இங்கு இருந்தனர்.
10. இப்பொழுது அங்கு ஒருவன் உள்ளான்.

### விடைகள்

1. நாங்கள் இவ்வேளை முதல் அங்கு உள்ளோம்.
2. நீங்கள் நாளை முதல் இங்கே இருங்கள்.
3. நேற்று நான் அங்கு இருந்தேன்.
4. மற்றவர் அங்கு இல்லை.
5. எவன் அங்கு இருந்தானோ அவன் நான்.
6. நீ யார்?
7. நான் ஒருவன்.
8. நீ எப்பொழுது அங்கு இருந்தாய்?
9. அவர்கள் நேற்று அங்கு இருந்தனர்.
10. நேற்று அங்கு யார் இருந்தனர்?
இன்று காலையில் இருந்து யார் உள்ளனர்?

१. ह्यः त्वं तत्र नासीः किम्?
२. अहम् तत्र नासम्।
३. वयं तत्र असाम।
४. ते अत्र सन्तु।
५. यूयम् अद्य प्रभृति कुत्र आस्त?
६. वयं अत्र आस्म।
७. यूयं तत्र आस्त।
८. एते कुत्रासन्!
९. ते सर्वे अत्रासन्।
१०. इदानीं तत्र एकः अस्ति।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஞானத்தின் அடிப்படையில் ஏற்பட்ட நட்பே பக்தி என்று மத்வாச்சாரியரின் சித்தாந்தத்தின்படி ஸ்ரீநிவாசனின் மீது கொண்ட பக்தியை இவ்வாறு பாடியுள்ளார்.

*''திரிதும்பதாசர கைலி கப்பவ கொம்பே....''* சர்வமும் நீயே என்று நினைத்து பக்தர்களிடையே பிச்சை எடுத்து வந்து உமக்கு காணிக்கையாக செலுத்துபவர்களுக்கு அருள்புரிந்து காப்பாற்றுகிறாய். மேலும் ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமெனில் உம்மை மதிக்காதவரையும் நினைக்காதவரையும் அழித்து அவர்களின் செல்வங்களையும் அழிப்பாய். உதாரணமாக பிருகுமுனி, திரிபுராசுரனுடைய மனைவி, கர்ணன், கௌரவர்கள், பூதனி ஆகியோர்கள் உம்மை மதியாமல் உம்மால் அழிக்கப்பட்டனர் அல்லவா?

*''தணிய நோடிதெனோ வேங்கடன! மன*
*தணிய நோடிதெனு சிகாமணி திருமலன!!''*

செல்வந்தனான திருவேங்கடவனை மனதாரக் கண்டேன்! அவர் திருமலை சிகாமணி திருவடிகளில் சலங்கைகளை அணிந்தவன், பல வகை வண்ணங்களுடன் கூடிய ஆரங்களை அணிந்தவன். கழுத்தில் வைஜெயந்தி என்ற மாலையை அணிந்தவன். விரல்களுக்கு மோதிரங்களையும் திருக்கைகளில் சங்கு சக்கரத்தை ஏந்தி, கங்கணத்தையும் அணிந்திருப்பவன். தலையில் கருமையான சுருளான கேசங்களை உடையவன். அவர் கண்களோ தாமரை போன்றது. சங்கை முழங்குபவன், வைகுண்டத்தை கையில் ஏந்தி இருப்பவன், அரிசியினால் தயாரிக்கப்படும் நைவேத்தியங்களை ஏற்றுக் கொள்பவன். வட்டி காசைப் பெறுபவன். மங்கள வாத்தியங்களைக் கேட்டு மெய் மறப்பவன் சுகந்த திரவியங்களை சுவாசித்து மகிழ்பவன். பட்டாடை உடுத்தி அழகாக இருப்பவன். அப்படிப்பட்ட ஸ்ரீநிவாசனைக் கண்டு மகிழ்ந்தேன் என்று கூறுகிறார்.

*''கனசு கண்டெனெ மனதல்லி களவள கொண்டெனே!*
*ஏனு ஹேளலி தங்கி திம்மய்யன பாதவனு கண்டெ!''*

மனதில் ஸ்வாமியை நினைத்தேன்! என்னவென்று வர்ணித்துச் சொல்வேன். அந்த திருமலைவாசனின் பாதங்களைக் கண்டேன். அந்த ஸ்வாமியின் அழகை வர்ணிக்க வர்ணிக்க தெவிட்டாத இன்பம் தோன்றும்.



# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்

தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

பலமுறை ஸ்வாமியைக் கண்ட புரந்தரதாசர் *“கண்டெனா கனசினலி கோவிந்தன”* என்று தம் கீர்த்தனையில் பாடியுள்ளார். மேலும் ஸ்ரீநிவாசனை, அன்புடன் பெற்றோர் குழந்தையை அழைப்பது போலவும், கோகுலத்தில் யசோதை பால கிருஷ்ணனை அழைத்தது போலவும், இங்கே பக்தி பரவசத்துடன் *“ஓடி பாரய்யா வேங்கடபதி நின்ன நோடுவெ மனதணிய”* என்று அதாவது “ஓடி வாரய்யா” என்று புரந்தரதாசர் அழைக்கிறார்.

ஸ்ரீகிருஷ்ணராக – கோகுலத்தில் எவ்வாறு சலங்கை ஒலியுடன் ஆடிப்பாடி வருகிறாரோ, அவ்வாறு வாரய்யா உம்மை அலங்கரிக்கிறேன் என்கிறார். உமக்கு உண்ண பல வகையான தின் பண்டங்களைத் தருகிறேன் என்கிறார். இவ்வாறு பலவாறாக ஸ்வாமியை துதித்து மகிழ்ந்து பல கீர்த்தனைகள் பாடினார்.

*“ஸ்ரீநிவாசா நீநே பாலிசோ! ஸ்ரிதஜனபால*

*கானலோல ஸ்ரீமுகுந்தனெ!....”*

ஸ்ரீநிவாசா நீயே என்னைக் காப்பாற்றுவாயாக. நீ அனைத்து உயிர்களையும் காப்பவன். ஸ்ரீமுகுந்தன். உம்மை மனதார தியானிப்பவருக்கு உம் அருளைத் தரும் வேணு கோபாலனான கோவிந்தன். வேத வேத்தியன், நித்யானந்தன் ஆவாய்.

*“அனுதின அநேக ரோககள!*

*அனுபவிசுடுவெனோ*

*கன மஹிம நீநே பல்லெயா!”*

சிறந்த இந்த மானிடப் பிறப்பு வந்த பின்னும் உம்மைத் தொட்டு வணங்காமல் வருந்தும் என்னைக் காப்பாற்று ஸ்வாமி. இருளில் நின்று பரிதவிக்கும் என் கண் முன் அழகாகத் தோன்றி அருள் புரிவாயாக. நாள்தோறும் பலவிதமான நோய்களால் வருந்தும் என்னைக் காப்பாற்றுவாயாக ஸ்வாமி. உம்மை நினைத்தாலே போதும் வந்து அருள்புரியும் புரந்தர விட்டலா! வாரும்! என்னைக் காப்பாற்று ஸ்வாமி!

தொடரும்...



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம் -24

*கஸ்த்வம் கோஹம் குத ஆயாத: கா*
*மே ஜனனீ கோ மே தாத:।*
*இதி பரிபாவய ஸர்வமஸாரம் விஸ்வம்*
*த்யக்த்வா ஸ்வப்ன விசாரம் ।।*

**நீ யார்? நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? என்னுடைய தாயார் யார்? என்னுடைய தந்தை யார்? இதெல்லாம் “கனவுக்காட்சிகள்” போல் ஒருவனுடைய மனதில் ஒரு மாயையாக பாவனை செய்து கொண்டு (அனுமானம் செய்து கொண்டு) இந்த உலகமே சாரமற்ற பொருள் என்று முடிவு செய்வாயாக – என்று உபதேசம் செய்கிறேன். (எதுவுமே நிரந்தரம் அற்ற மாயைதான் என்று உணர்த்துகிறார்.)**

– திரு. சீதாராமன், சென்னை.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 56க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ம | க | ள் | | 2 கு | ரு | வா | யூ | ர் | 3 தி |
| | 4 அ | கோ | பி | ல | ம் | ரி | ஹ | 5 ஸ்ரீ | | வ | ரு |
| 6 வா | ஷ் | ள் | 7 சு | ப் | ர | பா | த | ம் | | ப | ப் |
| ம | பா | மா | | | 8 ம | கா | வி | ஷ் | ணு | ல் | ப |
| ன | ங் | ரு | 9 க | ர் | க | மு | னி | வ | ர் | யி | தி |
| ர் | க | பெ | 10 வ | | ப | | ளை | ச | ச் | 11 து | |
| லூ | ந | ப் | ட | | ற் | | 12 வா | சு | தே | வ | ன் |
| வி | ம | ண | ப | | 13 க | கி | ட | ண் | 23 க | பா | ர |
| கோ | ஸ் | ண் | த் | மா | த் | ஜி | வ | ஸ் | 14 வி | ட் | சு |
| க் | கா | வ | ர | ம் | ச | ட் | ரு | வி | 15 ஸ்ரீ | 16 எ | கா |
| ரு | ர | ர் | சா | ர | | னி | க் | த | ம | 17 ஜ | 18 அ |
| 19 தி | ம் | 20 நீ | யி | 21 பி | | ழி | மொ | ய் | வா | ரு | 22 தி |




# குழந்தை பாக்கியம் அருளும் மீமிசல் ஸ்ரீகல்யாணராமர்



அறந்தாங்கி சங்கர்,
சென்னை, 94441 60161

வாழ்வில் எல்லா வளங்களும் இருந்தாலும் கூட குழந்தை பாக்கியம் ஒன்று இல்லாவிட்டால் எந்த ஒரு மனிதனுடைய வாழ்வும் முழுமை பெறாது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட குழந்தைச் செல்வத்தை அருளக் கூடிய பல திருத் தலங்கள் நமது தமிழகமெங்கும் அமைந்திருக்கின் றன. அப்படிப்பட்ட அற்புதமான திருத்தலங்களில் ஒன்றாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீகல்யாணராமர் திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மீமிசல் என்ற கிராமத்தில் அமைந்திருக் கிறது.

**தல வரலாறு :**

இலங்கையில் இருந்த சீதையை மீட்க வானரப் படை சகிதமாக இராம, இலட்சுமணர்கள் சென்ற னர். அவர்கள் மீமிசல் பகுதிக்கு வந்தனர். அப்பகுதி மக்கள் இராமருக்கு உதவி செய்தனர். இதற்கு கை மாறாக சீதையை மீட்டு வரும் போது, மீமிசலில் திரு மணக்கோலத்தில், சீதை இலட்சுமணனுடன் இராமர் இங்கு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அந்த இடத்தில் சரபோஜி மன்னர் ஸ்ரீகல்யாணராம ஸ்வாமி கோயிலைக் கட்டி திருப் பணிகள் செய்தார். இராவணனிடம் போரிட்டு வெற்றி பெற்ற ஸ்ரீகல்யாணராமர் எழுந்தருளியிருப்ப தால், தினமும் கடலுடன் போராடி தங்கள் வாழ்க் கையை ஓட்டும் மீனவ சமுதாயத்தினரும் தங்களுக் கும், தொழிலுக்கும் பங்கம் ஏற்படாமல் இருக்க இவரை குலதெய்வமாக வழிபாடு செய்கின்றனர்.

இலங்கை இருக்கும் திசை நோக்கி காட்சி யளிக்கும் இராமர் கோயில் கர்ப்பக்கிரகத்தில் இராமர், சீதை, இலட்சுமணன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கின்றனர். அருகில் ஆஞ்சநேயரும் எழுந்தருளியுள்ளார். இதே வடிவில் உற்சவ மூர்த்தி களும் காணப்படுகின்றனர்.

சீதையை மீட்கும்போது ராவணனுடன் ஏற்பட்ட போரில் இலட்சுமணன் மயக்கமடைந்து விட்டார். அவருக்கு மயக்கம் தெளிவிக்க மூலிகைகள் நிரம்பிய சஞ்சீவி மலையை எடுத்து வர ஆஞ்சநேயர் சென்றார்.

மலையை எடுத்து வரும் வழியில், சனி பக வான் ஆஞ்சநேயரிடம், உன்னை பிடிக்க வேண்டிய கால கட்டம் வந்ததால், உன்னுடைய சரீரத்தைப் (உடம்பை) பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்றார்.

தன்னுடைய காலை பிடித்து கொள் என்று ஆஞ்சநேயர் கூறியதால் அவருடைய காலை சனி பகவான் பற்றிக் கொண்டார். இதனால் இங்குள்ள ஆஞ்சநேயரை வழிபட்டால் சனி பகவானின் பார்வை குறையும் என்ற நம்பிக்கையுள்ளது.

இங்கு வரும் குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகளுக்கு, கேதுவின் தானியமான கருப்பு உளுந்தை, முகுந்தமாலா என்று கூறப்படும் மந்திரத்தை உச்சரித்து 90 நாட்களுக்குத் தேவை யான அளவு பிரசாதமாகத் தருகின்றனர். இதனை 90 நாட்கள் சாப்பிடுவதன் மூலம் குழந்தை பாக்கியம் கிடைப்பதாகவும் நம்பிக்கையுள்ளது.



அத்துடன் இராமர் சன்னதியில் தவழ்ந்த நிலையில் இருக்கும் ஐம்பொன்னால் செய்யப்பட்ட சந்தான கிருஷ்ணன் விக்ரகத்தை பூஜித்து, குழந்தை பாக்கியம் கோரி வரும் பக்தர்களுக்கு விக்ரகத்தை வழங்குகின்றனர். விக்ரகத்தை மடியில் வைத்திருக்கும் பக்தர்கள் பூஜை முடிந்து வீடு திரும்பும் போது அதைக் கோயிலில் வழங்கி விட்டு செல்கின்றனர். இவ்வாறு சந்தான கிருஷ்ணனை மடியில் சுமப்பவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. நாக தோஷம், செவ்வாய் தோஷம், கார்க்கோடகதோஷம், மாங்கல்ய தோஷம், பித்ருக்கள் தோஷம் நீங்க பரிகார பூஜைகள் நடக்கிறது.

இதற்காக பக்தர்கள் அருகிலுள்ள மீமிசல் கடலில் குளித்து விட்டு, கோயில் வளாகத்தில் உள்ள கல்யாண புஷ்கரணியில் குளித்து ஈரத்துடன் ஸ்ரீகல்யாணராம ஸ்வாமியை அர்ச்சனை செய்து வழிபட்டால் தோஷங்கள் நிவர்த்தியாகிறது.

இராமநவமி, வைகுண்ட ஏகாதசி, அனுமன் ஜெயந்தி, கிருஷ்ண ஜெயந்தி, தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ நாட்களில் கோயிலில் பூஜைகளும் ஆராதனைகளும் திருவிழாக்களும் நடக்கின்றன.

மீனவ சமுதாயத்தினர் தங்களுக்கும், தொழிலுக்கும் பங்கம் ஏற்படாமல் இருக்க ஸ்ரீகல்யாண ராமரை வழிபாடு செய்கின்றனர்.

இங்குள்ள ஆஞ்சநேயரை வழிபட்டால் சனி பகவானின் பார்வை குறையும் என்ற நம்பிக்கையுள்ளது. இராமருக்கும், சீதைக்கும் திருமஞ்சனம் செய்து, புது வஸ்திரம் சாற்றி சிறப்பு அர்ச்சனை செய்து நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர். கோயில் காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும்.

**இது ஆன்மீக பூமி.**

சித்தர்களும், மகான்களும், மகரிஷிகளும், முனிவர்களும், யோகிகளும் நம்மை நல்வழி நடத்தும் மகா குருமார்களும், இன்னும் பிற தவஸ்ரேஷ்டர்களும், வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் மண்.

மீமிசல் ஸ்ரீகல்யாணராமரை வணங்கி வாழ்வில் வளமும் நலமும் பெற்று வாழ்வோம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

☎ *0877–2264592.*

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும். ☎ *0877–2264584.*

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷியால் இங்குள்ள சிவலிங்கம் தோற்றுவிக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது. ☎ *0877– 2264587.*


**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ *0877–2264586.*

# பாதுகை சுமந்த பரந்தாமன்

**செல்வன் என். யோகேஷ்,**
**மேல்பதூர்**



நள்ளிரவு கும்மிருட்டு, தூறல் பூவானம் போல் தூவிக் கொண்டிருந்தது. எதிரே வரும் உருவம் தெரியாத அளவுக்கு மையிருட்டு இடையில் மின்னல் வெட்டு ஒளிரும் போது தான் பூவுலகும் மங்கலாகத் தென்படும். அந்த வேளையில் குருச்சேத்திரத்தில் அன்றைய போர் முடிந்து அடுத்த நாள் போருக்குப் போக வேண்டியவர்கள் உடலை வலுவாக்க உறங்கிக் கொண்டிருந்தனர். காயம் பட்டவர்கள் அங்க ஹீனம் அடைந்தவர்கள் மருத்துவ வசதி பெற்று ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர்.

மொத்தமாகச் சொல்ல வேண்டும் என்றால், இரு நாட்டுப் படைகளும் பாசறையில் தூங்கிக் கொண்டிருக்க மயான அமைதி நிலவியது. கௌரவர்களின் பாசறை பகுதியில் கட்டுக்காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது. அந்த முதன்மைத் தளபதி பிதாமகர் பீஷ்மர் தங்கியிருக்கும் இடம் அது. அங்கிருந்த மரத்தடியில் இருவர் மறைந்து நின்று மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். இது எந்த இடம் அண்ணா. என்னை இங்கு ஏன் அழைத்து வந்தீர்கள்.

பாஞ்சாலி பதட்டப்படாதே. அதோ மங்கிய தீவட்டி ஒளியில் தெரிகிறதல்லவா அது தான் கௌரவர்களின் பாசறை நேர் எதிரே பலத்த காவலுடன் கூடிய கூடாரத்தில் தான் பிதாமகர் பீஷ்மர் தூங்கிக் கொண்டி ருக்கிறார். பேசுவது கண்ணன் தான். எதிரிகளின் போர்ப் பாசறை ஆயிற்றே! யாரேனும் பார்த்து விட்டால் ஆபத்தா யிற்றே. நமக்கு இந்த நேரத்தில் என்ன வேலை? தங்கையே கவனமாகக் கேள்! துரியோதனன் தன் தளபதியும் பிதாமக ருமான பீஷ்மரிடம் அழுது முறையிட்டு ஒரு வாக்குரிதியை வாங்கி விட்டான்.

விடிந்ததும் நடக்கவிருக்கும் போரில் பொழுது சாய் வதற்குள் பாண்டவரை கொல்வதாக துரியோதனிடம் சபதம் செய்துள்ளார். மகாரதரும் பரசுராமரின் சீடருமான அவரை யாராலும் தடுக்க முடியாது. இந்த பேராபத்திலிருந்து பாண்டவர்களுக்கு எந்த இடைஞ் சலும் இல்லாதிருக்கவே இங்கு வந்துள்ளோம். இப்போது நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் அண்ணா என்றாள் பாஞ்சாலி.

யாரும் அறியாமல் பீஷ்மர் தூங்கிக் கொண்டிருக்கும் பாசறைக்கு உன்னை கூட்டிச் செல்வேன். தூங்கிக் கொண்டிருக் கும் பீஷ்மரின் காலை தொட்டு நீயாரென்று கூறாமல் வணங்க வேண்டும். தொடும் உணர் வின் மூலமும் உன் கைவளையல்கள் ஓசை மூல மும் யாரோ ஒரு பெண் என்று உணர்ந்து கொள்வார். இருளில் யார் என்று தெரியாமல் தீர்க்க சுமங்கலி பவ என்று உன்னை வாழ்த்து வார். அதன் பின்னர் நீ யாரென்று கூறு. தன் வாயால் சுமங்கலியாக நீடுழி வாழ்க என்று வாழ்த்தப்பட்ட பெண்ணின் கணவர்களை

அதன்பின் அவரே கொல்ல முடியாது என்றார் கண்ணபிரான். பாஞ்சாலிக்கு இப்போது நம்பிக்கையும் புதிய உத்வேகமும் ஏற்படவே, சரி அண்ணா அப்படியே செய்வேன் என்றாள். தூறல் நின்றபாடில்லை. போர்த்திக் கொண்டு நனையாமல் நடந்தனர். பாசறையை அடைந்தவுடன் பாஞ்சாலி உன் செருப்புகளில் இணைந்துள்ள மணிகள் நீ நடக்கும் போது ஒலி எழுப்புகின்றன. அந்த சிறிய சப்தம் கூட எதிரியை எழுப்பிக் காட்டிக் கொடுத்து விடும். அதனால் செருப்புகளை கழற்று என்பதை சைகை மூலமாகவேக் கூறினார் கண்ணன். பாஞ்சாலியும் கவனமாகப் புரிந்து கொண்டு உடனே தன் செருப்புகளை கழற்றி கைகளில் வைத்துக் கொண்டாள்.

ஆனால் கழற்றியதை எங்கே போடுவதென்று தெரியாமல் தடுமாறி நின்றாள். உடனே அந்த செருப்புகளை தன் கைகளில் வாங்கிக் கொண்டு உள்ளே செல்லும்படி கண்ணன் சைகையால் உணர்த்தினார். உள்ளே சென்ற பாஞ்சலி கட்டிலில் படுத்திருந்த பீஷ்மரின் கால்களை இரு கைகளாலும் தொட்டு வணங்கினாள். தீர்க்காயுசு மங்கல பவ என்று பீஷ்மர் வாழ்த்தினார். நான் தான் பாஞ்சாலி பாண்டவர்களின் பத்தினி என் கணவர்மார்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காக வந்தேன் என்று கூறினாள்.

நீயாக இந்த செயலை செய்திருக்க இயலாது. உனக்குப் பின்னால் யாரோ ஒரு சூத்திரதாரி இருக்க வேண்டும். வழிகாட்டி உன்னை இயக்கிய அவனை தண்டிக்காமல் விடமாட்டேன் என பொங்கி எழுந்தார் பீஷ்மர். ஒரு கையில் உருவிய வாளை ஏந்தி மறுகையில் தீவட்டியை பிடித்தவாறு வெளியே வந்தார். பயந்து நடுங்கிய படியே பாஞ்சாலியும் வெளியே வந்தாள். வெளியே பெய்துக் கொண்டிருந்த மழைத் தூரலில் பாஞ்சாலியின் செருப்புகள் நனைந்து விடாமல் இருப்பதற்காக அவற்றை தனது மார்பில் சேர்த்தணைத்து தன்னுடையப் பட்டு பீதாம்பரத்தால் போர்த்தியபடி நின்றுக் கொண்டிருந்த கண்ணபிரானைப் பார்த்தார்.

உலகையே காத்து இரட்சிக்கும் பரந்தாமன் அல்லவா நிற்கிறார்! தன்னை சரணடைந்த பக்தையின் எண்ணத்தை நிறைவேற்ற செருப்பை சுமந்தபடி அல்லவா நிற்கிறார். மழையில் நனைந்தபடி நிற்கிறாரே என்னே அவரது கருணை. பீஷ்மரின் மனம் அசை போட்டது. உருவிய வாள் உறைக்குள் புகுந்தது. பொங்கிய கோபம் பூவாய் குளிர்ந்தது. எதுவுமே பேசாமல் பாசறைக்குள் புகுந்தார். அண்ணனும் தங்கையும் வெற்றியுடன் திரும்பினார்.

இறை அருள் பெற அவனை உசுப்பிக்கும் செயல்களை இயற்கையின் முக்குணங்களான தாமஸ, ராஜஸ, ஸாத்விகங்களான வழிகளில் வகுத்துத் தக்காருக்குப் பொதுவாகக் கூறும் இயல்புடையது வேதம். பல்வகை வேள்விகள், அரிதாயும் பெரிதாயுமான தானங்கள், தியாகங்கள், கடுமையும் கொடுமையும் வாய்ந்த தவங்கள் போன்றவையும் வேதத்தின் கட்டளைகளாக உண்டு.

"காயோடு நீடுகனி உண்டு, வீசு கடுங்கால் நுகர்ந்து
நெடுங்காலம் ஐந்து தீயோடு நின்று தவம் செய்யும்"
வழிகள் அவை.




கர்ம காண்ட விளக்கமாக, சமுதாயப் பொது அறநெறிகளாகிய கட்டளைகளை சுருதிகளை ஸ்மரித்து (நினைத்து) மனு முதலானோர் செய்த அறநூல்கள் (தர்ம சாஸ்திரம்) ஸ்மிருதிகள் எனப் படுகின்றன. அவற்றுள் "மனு ஸ்மிருதி" மிகச் சிறந்தது. சமுதாயமாகிய பந்தலைத் தாங்கும் நான்கு கால்கள் போல, நான்கு வர்ண தர்மங்களையும் பொது அறங்களையும் தனி அறங்களான ஆசிரம நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. வியாசர், பராசரர் முனிவர்கள் வெளியிட்ட நூல்கள்.

# திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஏப்ரல் 24 முதல் 26 வரை



.....file photos

# ஸ்ரீராமானுஜ நாமாக்கள் கோவிந்த நாமாக்கள் வரிசை




அஷ்டபுஜ சேவக ராமாநுஜ!
அனந்த ரூபா ராமாநுஜ!
அனாத ரக்ஷக ராமாநுஜ!
அம்ருதமூர்த்தி ராமாநுஜ!
அத்புதரூபா ராமாநுஜ!
அதர்மசத்ரூ ராமாநுஜ!
ஆச்ரிதரக்ஷக ராமாநுஜ!
ஆனந்த ரூப ராமாநுஜ!
ஆதி சேஷா ராமாநுஜ!
ஆபத்பாந்தவா ராமாநுஜ!
ராமாநுஜா ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜா!
இளையாழ்வாரே ராமாநுஜ!
உடையவரே ராமாநுஜ!
எம்பார்நாதா ராமாநுஜ!
கருணாந்தரங்கா ராமாநுஜ!
கலித்வம்சகா ராமாநுஜ!
கல்பவிருக்ஷமா ராமாநுஜ!
தாஸபாவநா ராமாநுஜ!
தர்மஸம்ஸ்தாபக ராமாநுஜ!
தாசரதிகுரு ராமாநுஜ!
தீன ஜனோத்தார ராமாநுஜ!
ராமாநுஜ ஸ்ரீ யதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜ!
ஆபத்பாந்தவா ராமாநுஜ!
தீனசரண்யா ராமாநுஜ!
தீனதயாளோ ராமாநுஜ!
தீனபந்தோ ராமாநுஜ!
தேவராஜப்ரிய ராமாநுஜ!
காக்ஷாயாம்பர ராமாநுஜ!

காருண்யஜலதே ராமாநுஜ!
காமதேனு ராமாநுஜ!
காமதிபலதா ராமாநுஜ!
காமாதிஹரா ராமாநுஜ!
ராமாநுஜா ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜ!
காந்திமதீசுத ராமாநுஜ!
கூரேசபூஜித ராமாநுஜ!
கேசவதனயா ராமாநுஜ!
கோயிலண்ணனே ராமாநுஜ!
கத்யத்ரயகர ராமாநுஜ!
கோபீமோக்ஷதா ராமாநுஜ!
கோதாக்ரஜா ஸ்ரீராமாநுஜ!
திருப்புளியாழ்வாரே ராமாநுஜ!
திரிதண்டதாரி ராமாநுஜ!
தயாசிந்தோ ராமாநுஜ!
ராமாநுஜ ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜ!
புராண புருஷா ராமாநுஜ!
புருஷபுங்கவா ராமாநுஜ!
புண்டரிகாக்ஷா ராமாநுஜ!
பெரியநம்பிச்சாத்ர ராமாநுஜ!
பலபத்ராஜய ராமாநுஜ!
பக்தஜன ப்ரிய ராமாநுஜ!
பவபயஹரா ராமாநுஜ!
பக்தி மந்தாரா ராமாநுஜ!
தேசிகேந்த்ர ராமாநுஜ!
நித்யநிர்மலா ராமாநுஜ!
ராமாநுஜ ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜ!

பரமதயாளோ ராமாநுஜ!
பஞ்சாசார்ய பதாச்ரித ராமாநுஜ!
பராங்குசசேவக ராமாநுஜ!
பரமஹம்சா ராமாநுஜ!
பாவநபுருஷா ராமாநுஜ!
பாபவிமோசன ராமாநுஜ!
பணிசரீரா ராமாநுஜ!
பிரியம்வதா ஸ்ரீராமாநுஜ!
ராமாநுஜ ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜா!
யாமுனப்ரிய ராமாநுஜ!
ரங்கநாத புத்ரா ராமாநுஜ!
லக்ஷ்மணமுனே ராமாநுஜ!
லீலாமாநுஷவிக்ரஹ ராமாநுஜ!
வரதராஜசுத ராமாநுஜ!
வீராதிவீரா ராமாநுஜ!
வைஷ்ணவப்ரியா ராமாநுஜ!
சங்கசக்ரப்ரத ராமாநுஜ!
சாரதா சோகநாச ராமாநுஜ!
சிஷ்டரஞ்ஜனா ராமாநுஜ!
ராமாநுஜ ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜ!
சிஷ்டபரிபாலா ராமாநுஜ!
ஸ்ரீபாஷ்யகர்தா ராமாநுஜ!
ஸ்ரீராமாநுஜ ராமாநுஜ!
ஸ்ரீலக்ஷ்மிணார்யா ராமாநுஜ!
ஸ்ரீரங்கப்ரிய ராமாநுஜ!
பக்தவத்ஸலா ராமாநுஜ!
பாகவதப்ரியா ராமாநுஜ!
பாஷாஸன்னுத ராமாநுஜ!
புவனபாவனா ராமாநுஜ!

பூரிதயாநிதே ராமாநுஜ!
ராமாநுஜ ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜ!
பூதபுரிசா ராமாநுஜ!
மன்னாதாஜய ராமாநுஜ!
மந்த்ரப்ரகாசா ராமாநுஜ!
முக்தி தாயகா ராமாநுஜ!
மேஷாத்ர்ரா சம்பவ ராமாநுஜ!
ஸ்ரீராமசோதர ராமாநுஜ!
ஸ்ரீரங்காச்ரித ராமாநுஜ!
ஸ்ரீகிருஷ்ணக்ரஜ ராமாநுஜ!
ஸ்ரீபாஷ்யகாரா ராமாநுஜ!
செல்வபிள்ளஜனக ராமாநுஜ!
ராமாநுஜ ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜ!
ஸ்வேதவர்ணா ராமாநுஜ!
சேஷாவதார ராமாநுஜ!
சோகநாசநா ராமாநுஜ!
சஹஸ்ரநாமா ராமாநுஜ!
சத்ய சங்கல்பா ராமாநுஜ!
சஜ்ஜனப்ரியா ராமாநுஜ!
சாக்ஷீபூதா ராமாநுஜ!
சுதீர்ச பாஹு ராமாநுஜ!
சுகுணாகர ராமாநுஜ!
சுரிசிகாமணி ராமாநுஜ!
சௌசீல்யபூஷா ராமாநுஜ!
க்ஷாந்தி வர்த்தனா ராமாநுஜ!
ஸ்ரீலக்ஷ்மிணார்யா ராமாநுஜா!
க்ஷீரபுரீசா ராமாநுஜ!
ராமாநுஜ ஸ்ரீயதிராஜா!
யதிராஜா ஸ்ரீராமாநுஜா!



25-03-2021 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுவிற்கு சிறப்பு உறுப்பினராக நியமிக்கப்பட்ட திரு. மல்லாதி விஷ்ணு (மத்திய விஜயவாடா சட்டமன்ற உறுப்பினர்) அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்குகின்ற தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி அவர்கள்



திருமலை க்ஷேத்திர பாலகரான ருத்ரருக்கு மஹா சிவராத்திரியை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு பூஜை





தி.தி.தே. சார்பில் ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர் பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள் பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பித்த போது



தி.தி.தே. சார்பில் மந்த்ராலயம் ஸ்ரீகுரு ராகவேந்திரஸ்வாமி 426வது ஆராதனை உத்ஸவத்தை முன்னிட்டு சேஷ வஸ்த்திரம் சமர்ப்பிக்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி அவர்கள்



அண்மையில் திருமலையில் தி.தி.தே. கொண்டாடிய ஸ்ரீஅனந்தாழ்வான் 967வது அவதார உத்ஸவ திருக்காட்சி. இந்நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள், சின்னஜீயர் ஸ்வாமிகள், தி.தி.தே. இந்து தர்ம பிரசார பரிக்ஷத் செயலாளர் பேராசிரியர் கே.ராஜகோபாலன் அவர்கள் மற்றும் ஸ்ரீஅனந்தாழ்வான் வம்சத்தினர் கலந்துகொண்டனர்

## திருவேங்கடவன் திருலீலைகள்



# புராதன சொம்பு


திரு. இரா. வசந்தராசன், கிருஷ்ணகிரி
63805 37510

நான் தமிழ் நாட்டில் உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு மனைவி, இரண்டு மகள்கள், இரண்டு அண்ணன்கள் உள்ள னர். அண்ணன்கள் இருவரும் கர்நாடக மாநிலத்தில் குடும்பத்தோடு வசித்து வருகின்றனர். எங்களுக்கு ஒரு பெரிய வீடு இருக்கிறது. இந்த சம்பவம் நடந்த சமயத்தில் வீடு பாகம் பிரிக்கப்படவில்லை. வீடு முழுவதும் என்னுடைய கட்டுப்பாட்டில் இருந்தது.

எங்கள் வீட்டில் எங்கள் தாத்தா காலத்து பித்தளை சொம்பு ஒன்று இருந்தது. புரட்டாசி மாதங்களில் எங்கள் தாத்தா விரதமிருந்து, முடியும் பணத்தை இந்த சொம்பில் போட்டு வைப்பார். திருப்பதி வர கனவில் உத்தரவு கிடைத்ததும், சொம்பில் உள்ள பணத்தை எடுத்து குடும்பத்துடன் திருப்பதி செல்வார். செலவு போக மீதி உள்ள பணத்தை திருப்பதி உண்டியலில் போட்டு விட்டு ஊர் திரும்பி விடுவார்கள்.

எங்கள் தாத்தா காலத்துக்குப் பிறகு, நாங்கள் இந்த உண்டியல் சொம்பை பயன்படுத்தவில்லை. திடீரென ஒரு நாள் இரவு என் மனைவியின் கனவில் தோன்றிய ஸ்ரீவேங்கடேஸ்வரப் பெருமான், “இனி இந்த சொம்பை நீங்கள் பயன்படுத்தி முடியும் பொழுது திருப்பதி வாருங்கள்”, என்று கூறி மறைந்து விட்டார். அடுத்த நாளே அந்த சொம்பை நாங்கள் எடுத்துக் கொண்டோம்.

மறு நாளே, பெங்களூரில் வசிக்கும் என்னுடைய பெரிய அண்ணன் ஊருக்கு வந்து, அந்த சொம்பு அவருக்கு வேண்டும் என்று கேட்டார். நடந்ததைக் கூறினோம். அவர் “இறைவன் ஆணைப்படி உண்டியல் சொம்பை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்”, என்று கூறி விட்டு சென்று விட்டார். திருவேங்கடவன் லீலையால் தான் அந்த புராதன சொம்பு எங்களுக்குக் கிடைத்தது என்பதை நினைக்கும்பொழுது மனம் மகிழ்ச்சியடைகிறது.



**வாசகர்களே...**

ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண் கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமி யின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகை யில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*எங்கள் முகவரி :*
**பிரதான ஆசிரியர்,
“ஸப்தகிரி”, தி.தி.தே.,
கபிலத்தீர்த்தம் சாலை,
திருப்பதி - 517 507.
0877- 2264543, 2264359.**







# சித்திரை மாத சிறப்புகள்

முனைவர் ச . செந்திலாண்டவன்,
94445 82856.

நமது பாரதபூமி, பல பண்பாட்டு விழாக்களை அவற்றின் மரபு நிலை மாறாமல், மாற்றாமல், வழிவழியாகக் காலங்காலமாகக் கொண்டாடும் தொன்மையும் தூய்மையும் வாய்ந்தது! அவ்வகையில் தமிழ்ப்புத்தாண்டும் கோலாகலமாகச் சித்திரை முதல்நாள் கொண்டாடப் பெறுகின்றது! 14–04–2021 புதன் கிழமை, பரணி நட்சத்திரம் துவிதியை திதி சித்தயோகம் சேர்ந்த சுபயோக சுபநாளில் “பிலவ” வருடம் பிறக்கின்றது!

கணிய (ஜோதிட) முறையில், “வியாழ வட்டம்” என்று சொல்லக்கூடிய அறுபது தமிழ் வருடங்களுள் முப்பத்தைந்தாவது (35) வருடமாகிய “பிலவ” ஆண்டு நல்ல, தெய்வீகமாக, நல்வளங்களைத் தருகின்ற ஆண்டாகப் பிறக்கின்றது! அந்நாளில் சூரியன் மேஷ ராசியில் நுழைகின்றார்!

சித்திரை முதல் நாளான, தமிழ்ப் புத்தாண்டில் கோயில்களில் சிறப்பு வழிபாடுகளும், நவக்கிரக வழிபாடுகளும், பஞ்சாங்கம் படித்தலும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. பஞ்சாங்கம் படித்தல் என்ற நிகழ்வும் பெரும்பாலும் கோயில்களிலும், ஆதீனங்களிலும், சிறுபான்மை வீடுகளிலும் நடைபெறும்.

ஆண்டு அல்லது வருடம் என்னும் கால தேவதைக்கு பன்னிரண்டு மாதங்களும் கை–கால்–முகம் போன்ற அங்கங்களாகச் செயற்படுகின்றன. நவ நாயகர்களாகிய சூரியன் உள்ளிட்ட நவக்கிரகங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைப் பஞ்சாங்கம் படித்துப் பலன் சொல்வார்கள்.

பஞ்ச +அங்கம் = பஞ்சாங்கம். இவை யோகம், திதி, கரணம், வாரம், நட்சத்திரம் இவ்வைந்தும் ஆண்டு முழுவதும் என்னென்ன பலன்களைக் கொடுக்கும் என்பதை முன்னோர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். இவற்றில் 1)யோகம் என்பது நோய்களைப் போக்கும். 2) திதி என்பது நன்மையை அதிகரிக்கும். 3) கரணம் என்பது வெற்றியைத் தரும், 4) வாரம் என்பது ஆயுளை (வாழ்நாள்) நீட்டிக்கும். 5) நட்சத்திரம் பாவத்தைப் போக்கும் என்பது முன்னோர் வாக்கு. இதன் அடிப்படையில்தான் நாட்காட்டிகள் அணியம் (தயார்) ஆகின்றன. நாள்தோறும் பஞ்சாங்கம் படிக்க முடியாவிட்டாலும், நாட்காட்டியைப் பார்த்து நலம் பெறலாம்! அதுமட்டுமல்லாமல் தெய்வத் தலங்களில் நாள்தோறும் நடைபெறும் உற்சவங்களை அதில் போட்டிருப்பார்கள். அந்தத் தெய்வங்களைக் கணநேரம் நினைத்தாலும் நல்ல புண்ணியம் கிடைக்கும்!

சித்திரை முதல் நாளில் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மை செய்து, வாசலில் மாக்கோலம் போட்டு அழகு படுத்துவர். வீட்டின் நிலை வாசலிலும் மற்ற வாயிற்படி களிலும் மஞ்சள், குங்குமம் வைப்பர். வீட்டின் நிலை வாசற்படியின் மேலே மாவிலை, தென்னோலைத் தோரணங்கள் கட்டி அழகு சேர்ப்பர். எங்கெல்லாம் அழகு இருக்கின்றதோ அங்கெல்லாம் திருமகளாகிய

மகாலட்சுமி வாசம் செய்வாள் என்பது நம் நம்பிக்கை!

காமதேனுவாகக் கருதப் படும் பசுமாட்டின் கோமியம் எடுத்து வீட்டில், வெளியில், ஆல யத்தில் தெளித்துத் தூய்மை செய் வதும் வழக்கம். புத்தாடை உடுத்தி அனைவரும் அறுசுவை உணவு சமைத்து சூரியனுக்கும் வீட்டுத் தெய்வங்களுக்கும் படைத்து உண்பர். பானகம், நீர்மோர் ஆகியவற்றையும் காணிக்கையாக்கிப் பருகுவர்.



கோடைக்கு இதமான உணவுகள் இவை! அறு சுவை உணவை மதிய வேளையில் படையல் இடும் போது, வேப்பம்பூ பச்சடி, மாங்காய் பச்சடி கட்டாயம் இடம் பெறும். வாழ்க்கை என்பது இன்பமே நிறைந்த தில்லை. துன்பமும் இடையிடையே வரும். அவற்றை தெய்வத்தின் அருளோடும், தன்னம்பிக்கையோடும் தடைகளைக் கடக்க வேண்டும் என்பதின் குறியீடே கசப்பான வேப்பம்பூப் பச்சடியும் இனிப்பான மாங்காய்ப் பச்சடியும். மேலும் இவை நல்ல மருத்துவக் குணங்கள் கொண்டவையல்லவா!

பிறக்க இருக்கும் "பிலவ" வருடத்தின் ஆட்சி நாயகனாக தீயின் நிறம் பெற்ற செவ்வாய்க் கோள் (அங்காரகன்) ஆதிக்கம் இருப்பதால் புத்தாண்டு நாளில் சிவப்பு நிற ஆடையணிந்து கோயில்களுக்குச் சென்று நவக்கிரகங்களை வழிபட வேண்டும். பாராய ணமாகத் திருஞானசம்பந்தர் இயற்றிய "கோளறுப் பதிகம்" படித்துப் பல நன்மைகள் பெறலாம். இது போலவே, புத்தாண்டு நாளில் தர்மங்கள் செய்வதும், ஏழைகளுக்கு அன்னதானம், நீர்மோர், பானகம் ஆகியவை அளித்தலும் மிகுந்த புண்ணியம் தரும் செயல்களாம்! வீட்டிலும் வியாபார நிறுவனங்களிலும் புது கணக்கு எழுதும் பழக்கம் உண்டு.

அறுபது "தமிழ் வருடங்கள்" ஒரு "வியாழ வட்டம்" எனப் பெயர் பெறும். அந்த வட்டத்தில் 35 ஆவது வருடமான "பிலவ" வருடம், இப்போது ஆரம்பிக் கின்றது. சித்திரை முதல் நாளில் தஞ்சை மாவட்டம் சுவாமி மலை யில் அறுபது படிகள் – அறுபது ஆண்டுப் படி பெயர்கள் கொண்டவை. படி விழா நடைபெறுகிறது. தெலுங்கு வருடப் பிறப்பு யுகாதி என்று கொண்டாடப்படுகின்றது. இது "சதுர்யுகம்" ஆரம்பித்த முதல் நாளைக் குறிக்கின்றது. சதுர் யுகமானவை 1) கிருத யுகம், 2)திரேதாயுகம், 3) துவாபர யுகம், 4)கலியுகம். தமிழ்ப் புத்தாண்டிற்கும் யுகாதிப் பண்டிகைக்கும் சிறிது வேறுபாடு இருந்தாலும் இரண்டுமே சித்திரையில் சூரியன் பிரவேசிக்கும் நாளைக் கணக்கிட்டே கொண்டாடப்படுகின்றன.

**விஷுப் பண்டிகை :**

தமிழ்ப் புத்தாண்டு தான் கேரளத்தில் "சித்திரை விஷு" என்ற பெயரில் கொண்டாடப் படுகின்றது. இந்தப் புதுநாளில் "கனி காணுதல்" என்ற விழாவாக இது கூறப்படுகின்றது. ஒரு பெரிய தாம்பாளம் (தட்டு) எடுத்து அதில் அனைத்து விதமான கனிகளையும் அதாவது, மாம்பழம், வாழைப்பழம், பலாச்சுளைகள், ஆரஞ்சு, ஆப்பிள் என்று நன்கு பழுத்த பழங்களை அழகுற அடுக்கி, தங்க நாணயங்கள், பணக்கட்டு, சில்லறை நாணயங்கள், முகம் பார்க்கும் கண் ணாடி, பூக்கள், தங்க ஆபரணங்கள் அனைத் தையும் முதல் நாளிரவே தயார் செய்து வைத்து சித்திரை முதல் நாள் அத்தட்டில்தான் அனை வரும் கண் விழிப்பர். இதுவே "கனி காணுதல்" என்ற வைபவம்.

இப்படிப்பட்ட இந்த "கனி காணுதல்" வழக்கத் தினால், கண் திருஷ்டிகள் நீங்கிப் புத்தாண்டில் சகல செல்வங்களும் செறிந்து, சேர்ந்து வளமூட்டி வாழ வைக்கும் என்பது நம்பிக்கை! கேரளத்தில் மட்டும் இருந்த இந்த வழக்கம், மெல்ல மெல்ல தமிழகத்தின் எல்லாப் பகுதியிலும் ஊடுருவி, மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது! அன் றைய புது நாளில் கோயில்களில் எல்லார்க்கும் நாணயம் வழங்குவர். பெரியோர் சிறியோர்க்கு வழங்கும் இது விஷு கைந்நீட்டல் எனப்படும்.

*"புரா ஸூத்ரைர் வ்யாஸ: ச்ருதிசத
ஸிரோர்த்தம் க்ரதிதவாந்
விவவ்ரே தத் ச்ராவ்யம் வகுளதரதா
மேத்ய ஸ புந:
உபாவேதௌ க்ரந்தௌ கடயிதுமலம்
யுக்திபிரஸௌ
புநர் ஜஜ்நே ராமாவரஜ இதி ஸ
ப்ரஹ்ம முகுர:"*

என்னும் சுலோகம் பூர்வர்களால் ஸ்வாமி இராமாநுசரின் பெருமையினை காட்டும் விதமாக எடுத்தாளப் பட்டுள்ளது. இதன் கருத்து ஏதென்னில் உபநிஷத்துக்களின் பொருட்களை முதலில் வியாஸர் சாரீரக மீமாம்ஸையென்னும் ப்ரஹ்ம ஸூத்ரத்தினால் தொகுத்தார்.

அந்த வியாஸர் மீண்டும் வகுள மாலை அணிந்த நம்மாழ்வாராக அவதரித்து திருவாய்மொழியின் மூலமாக பிரம்ம ஸூத்திரத்தை விவரித்தார். இவ்விரண்டு நூல்களையும் பொருத்தமாக ஸமந்வயப்படுத்த அவரே மீண்டும் இராமாநுஜராக அவதரித்தார்.

ஆசார்ய ஹ்ருதயம் என்னும் அற்புத நூலில் 65–வது சூத்ரம் பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ர வாக்யங்கள் ஒருங்க விடுவர் என்பதாகும். இவ்விடத்திற்கு வ்யாக்யானம் அருளும் பெரிய ஜீயராம் மணவாளப் பிள்ளை "பாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யம் பண்ணியருளும்போது ஸூத்ரவாக்யங்களில் ஸந்நிக்தங்களான அர்த்தங்களெல்லாம் இப்பிரபந்தத்தின் ஸூக்திகளைக் கொண்டு நிர்ணயித்து ஒருங்க விட்டருளுவர் என்கை" என்று அருளியிருப்பது காண்க.

முக்கியமாக பேத, அபேத ஸ்ருதிகளை சரீர சரீரிபாவத்தாலே ஒருங்கவிட்டது ஆழ்வாரின் அருளிச்செயலைக் கொண்டே என்பதில் ஐயமில்லை.

உடல் மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் (திருவாய்மொழி 1–1–7) என்னும் பாசுரத்தைக் கொண்டே "தத்த்வ மஸி" (சாந்தோக்யம் 6–8–7) என்னும் உபநிஷத்தின் பொருளை அருளிச் செய்கிறார். இனி உபநிஷத் என்றால் என்ன? அதன் பிரிவுகள் என்ன? என்பதனை சிறிது அறிந்து கொள்வோம்.

**உபநிஷத் என்பதன் பொருள் :**

ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்ய நூலுக்கு மங்கள சுலோகம் அமைத்தருளினார். அது தன்னில் *"ஸ்ருதி ஸ்ரீரஸி விதீப்தே" "ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே"* (என திருவேங்கடமுடையானைப் போற்றுகிறார். அதாவது வேதத்தின் ஸிரஸ்ஸான வேதாந்தங்களிலே திருவேங்கடத்தான் மிகுந்து விளங்குகின்றான் என தெரிவிக்கிறார். இரு பாகங்களாக உள்ள வேதத்தினால் தெரிவிக்கப்படும் பகவான், வேதத்தின் பூர்வ பாகத்தில் விளங்குகின்றான். வேதத்தின் உத்திர பாகமாக) வேதாந்தத்தினால் மிகுந்து விளங்குகின்றான் என்று ஆழ்பொருளை அறிவிக்கிறார். அதாவது *"ச்ருதௌ தீப்தே" - "ச்ருதி சிரஸி விதீப்தே"* என்று பொருள் காட்டுவர் நம் பெரியோர்கள். மேலும் பூர்வ பாகத்தில் காம்யமான பாகமான ஸ்வர்காதி ஸுகங்கள் காட்டப்படுகின்றது. உத்தர வேதாந்தத்தினால் பரமபுருஷார்த்தமான மோக்ஷமாகிற செம்பொருள் காட்டப்படுவதால் முக்தியை விரும்பும் முமுக்ஷுக்கள் பரமபுருஷார்த்தத்தையே கை கொள்கின்றனர். எனவே உபநிஷத்துக்கள் தத்த்வத்ரயமான சித், அசித், ஈஸ்வரனை காட்டுகின்றன.



"உபநிஷத்" என்னும் சொல்லிற்கு பல விதமான பொருட்களை காட்டுகின்றனர் வைதிக நெறியாளர்கள். உப–ஸமீபே, நிஷ்த்ய – உபவிச்ய (அமர்ந்து) சிஷ்யேண, ஆசார்யாந் க்ருஹ்யமாணத்வாத் – உப நிஷத் என்பர். பரம ரஹஸ்யமாகையாலே இதை குஹ்யமாக அதிகரிக்க வேண்டும் என்று காட்டுவர். அன்றிக்கே "ஷத்ல்" என்ற தாதுவுக்கு விசரணம், கதி, அவஸாதநம் என பொருள்கள் பல வாறாக உள்ளதால் உபநிஷத் என்கிற சப்தத்தில் இருக்கும் உப, நீ என்பவை உபஸர்கம் "ஷத்ல்" தாதுவிலிருந்து நிஷ்பந்தமான "ஷத்" என்பதற்கு விவரணம் என்ற பொருள் கொண்டு தூள்தூளாக அழிப்பது என்னும் பொருள் கொண்டு தாபத்ரயங்களைப் போக்கி நல்ஜ்ஞானத்தை, உண்டு பண்ணுவதால் வேதாந்தத்திற்கு "உபநிஷத்" என்று பெயர் காரணம் கூறுவர். பகவானுக்கு மிக அருகில் உள்ளது என்ற பொருளிலே, பகவானின் ஸ்வரூப, ரூப, குணங்களை நேராக உணர்த்துவதால் இதற்கு உபநிஷத் என்கிற பெயர் என்பர் நம் பூர்வாசார்யர்கள். உபநிஷத்துக்களில் ப்ரஸித்தமாக தசோப நிஷத் என கொண்டாடப்படுகின்றது. அவைகள் 1) ச, 2) கேன, 3) கட, 4) ப்ரச்ந, 5) முண்டக, 6)மாண் டூக்ய, 7) தைத்ரீய, 8) ஐதரேய, 9) சாந்தோக்ய, 10) ப்ரஹ தாரண்யகம் என்பவையாம். இது தன்னில் ஒன்பதாவது வரிசையில் உள்ளது சாந்தோக்ய உபநிஷத்தாகும். ***"வேதாநாம் ஸாமவேதோஸ்மி"*** என்கிறான் பார்த்தசாரதி எம்பெருமான். அதன் உபநிடத பாகமான சாந்தோக்யம் மிக்க பெருமை வாய்ந்தது அச்சாந்தோக்யமே திருவாய் மொழியாக அவதரித்தது என்பது ஆசார்ய ஹ்ருதய நூலின் 52–வது சூத்ரம் தன்னில் விவரிக்கப்பட்டுள்ளது.

***"சாமவேத கீதனாகிய சக்ரபாணி"*** (திருச்சந்த விருத்தம் – 14) என்று திருமழிசைப்பிரானும், ***"சந்தோகன் பௌழியான்"*** (பெரிய திருமொழி 5–5–9) என்றும், ***"சந்தோகா தலைவனே"*** (பெரிய திருமொழி 11–8–9) என்று பலபடிகளாலே இதன் பெருமையை பேசி மகிழ்வெய்தினர் ஆழ்வார்கள். இச்சாந்தோக்ய உபநிஷத்தானது எட்டு ப்ரபாடகமாக (அத்யாயங்கள்) உள்ளது. தாண்டி சாகையின் கடைசி பாகமாகும். வேத வியாஸர் பிரம்ம ஸூத்திரத்தில் அதிகளவு எடுத்தாண்டது இவ்வுபநிஷத்தையே. இது தன்னில் ஆறாவது ப்ரபாடகமான ஸத்வித்யையில் அருணர் என்பவரின் பிள்ளையான உத்தாலகர் என்பவரின் மகனான "ஸ்வேதகேது" என்னும் பிள்ளைக்கு உபதேசிப்பதாய் அமைந்துள்ளது. இது தன்னில் பதினாறு கண்டங்கள் உள்ளன. தந்தையின் ஆணைப்படி பன்னிரண்டு வருடங்கள் குருகுல வாசம் செய்து வீடு திரும்பிய ஸ்வேத கேதுவிடம் எதை தியானம் செய்து அறிந்து கொண்டாய் எல்லாவற்றையும் அறிந்து கொண்டதாகுமோ, அதைப் பற்றி கூறு என கேட்க ச்வேதகேதுவிற்கு ஒன்றும் விளங்காமல் இருப்பதை அறிந்து கொண்டு தத்துவங்களைப் பலவாறாக உபதேசிக்க ஆரம்பித்தார் உத்தாலகர்.

எல்லா உலகங்களுக்கும் மூலகாரணமாகவும், ஆத்மாவாகவும் இருப்பது பிரம்மம் தான். அந்த பிரம்மம் தான் நீயாக, அதாவது உனக்கும் ஆத்மாவாக இருக்கின்றது என்று விளக்கும் முகமாக "தத்த்வமஸி ஸ்வேத கேதோ" என்று அழைத்தார். "தத்த்வம் அஸி" என்னும் வாக்யம் ஆத்மா ஒன்று தான் என்னும் கருத்தாக அமையாது. ச்வேத கேதுவை சரீரமாகக் கொண்டுள்ள பகவானும், காரணப்பொருளான பகவானும் ஒருவன் என்ற உண்மையையே உணர்த்தும் ஜகதாசார்யரான ஸ்வாமி இராமாநுஜர் வேதார்த்த ஸங்கரஹத்திலும், ஸ்ரீபாஷ்யத்திலும் இது தன்னை விளக்கியருள்கிறார். எவ்வாறு எனில் "தத்த்வமஸி" என்கிற வாக்யம் ஸமாநாதிகரண வாக்யமாகும். அதாவது : – ***"தத்புருஷ ஸமாநாதி கரண: கர்மதாரய:"*** (பாணினி (1–2–4.2) என்னும் பாணினி ஸூத்திரத்தின்படி அதன் பாஷ்யத்திற்கு விவரணம் எழுதுகையில் ***''கையடர்'' பிந்ந***




*ப்ரவ்ருத்தி நிமித்தஸ்ய அநேகஸ்ய சப்தஸ்ய ஏகஸ் மிந் அர்த்தே வ்ருத்தி: ஸாமாநாதிகரண்யம் உச்யதே''* வெவ் வேறு தன்மைகளைக் கூறுவதற்கு உறுப் பான பல சப்தங்களை ஒரு பொருளைக் குறித்து வழங்குவது ஸாமாநாதி கரண் யம் என்று விவரணம் எழுதியுள்ளார்.

சொற்களுக்கு இரண்டு வகையாய் பொருள் உணர்த்தும் ஆற்றல் உண்டு. அவை 1) பர்யவஸாந வ்ருத்தி, 2) அபர்ய வஸாந வ்ருத்தி என இரு வகைப்படும்.

1) பர்யவஸாந வ்ருத்தி என்றால் பசு, பக்ஷி, மனுஷ்யன் என்றால் பசு, பக்ஷி, மனுஷ்யன் என்கிற சரீரத்தை உடைய ஆத்மாக்கள் என்று பொருள் கொள்ளு தல் ஆகும்.

2) அபர்யவஸாந வ்ருத்தி என்றால் பசு, பக்ஷி, மனுஷ்யன் என்னும் உடலை உடைய ஜீவாத்மாக்களுக்கு அந்த ராத்மாய் இருக்கும் பரமாத்மா என்று விசேஷ்ய பர்யந்தம் பொருள் கொள்ளப் படும். இது தன்னை திருவுள்ளம் பற்றியே நம்மாழ்வார் தன் திருவாய் மொழியில் *''கடல் ஞாலம் செய்தேனும் யானே யென்னும்''* (5–6) புகழும் நல் ஒருவன் (3–4) என்றும் வேதாந்தத் தின் உட்பொருளை அருளிச் செய்துள்ளார்.



இக்கருத்தை உட்கொண்டே "தத்த்வமஸி" என்னும் வேதாந்த வாக்யம் அமைந்துள்ளது. அதாவது நம் போன்றவர் களுக்கு இருப்பது சரீரம் "ஸௌபரி" என்ற மஹரிஷி பல சரீரங்களை எடுத்தார் என்பது சரித்திரம். ஆனால் பகவானுக்கு எல்லாமே சரீரம்.

இவ்வுலகையே சரீரமாக உடையவன் பகவான் *''யஸ்யா தம சரீரம்'', ''யஸ்ய ப்ருதிவி சரீரம்''* (ப்ரஹ தாரண் யகம்) முதலான வேதாந்த வாக்யங்களானது பகவானை தவிர்த்த அனைத்து அறிவுடைய, அறிவுஅற்ற பொருள்களும் அவனுக்கு சரீரம் என்று காட்டுவதை ஸ்ரீராமாநுஜர் தம் ஸ்ரீபாஷ்யத்திலே "தத்த்வ மஸி" என்கிற சாந்தோக்ய வாக்யத்தைக் கொண்டு ஜிக்ஞா ஸாதி கரணத்திலே அவித்யை குறித்ததான "ஸப்தவிதா நுப பத்தி:" (ஏழு விதமான பொருந்தாமை) என்னும் கட்டத்தில் ஆறாவதான நிவர்த்தக அனுபத்தியிலே வெகு விரிவாகக் காட்டி யருள்கிறார். ஆநந்தமயாதி கரணத்திலேயும் இது தன்னை தெளியக் காட்டியருள்கிறார்.

இவ்விதமாக ஸமாநாதி கரண்யத்தாலே எட்டு விதமான பாவங்கள் ஸித்திப்பதை 1) சரீர–ஆத்ம பாவம் 2) நிர்வாஹ – நிர்வாஹ்ய பாவம், 3) ஜந்ய–ஜனக பாவம், 4) குண–குணி பாவம், 5) உப மாந – உபமேய பாவம், 6) விசேஷண – விசேஷ்ய பாவம் 7) கார்ய காரண பாவம், 8) நிரூப்ய–நிரூபக பாவம் என பூருவர்கள் தங்கள் வ்யாக்யானங்களிலே காட்டியருள் கின்றனர்.

இது தன்னில் (உபமான – உபமேய பாவம்) – *''கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணி (சாந்தோக்யம் 1-6-7)* அந்தரதி கரணத் திலும் *''தஸ்மிந்காமா: ஸமாக்ஷிதா''* (சாந்தோக்யம் 8–1–5) அவ னிடம் கல்யாண குணங்கள் சேர்ந்துள்ளன என்பதனை (குண– குணிபாவம்) ஈக்ஷத்யதிகரணத்திலும், "அநேந ஜீவேந ஆத்மந அநுப்ரவிச்ய நாமரூப வ்யாகரவாணி" (சாந்தோக்யம் 6–3–2) ஜிக்ஞாஸாதிகரணத்தில் (கார்ய – காரண பாவம்) என்று காட்டியருள்வதை கண்டு எம்மி இராமாநுஜன் மெய்மதிக்கடலே என்கிற அமுதனாரின் திருவாக்கின் பெருமையை நன்கு உணரலாம்.

குறைவொன்றுமில்லாத கோவிந்தனே நமக்கு தத்வம். அவனை அறிந்து வழுவிலா அடிமை செய்தலே நமக்கு ப்ராப் யம் (அடையத் தக்கது) ஆக திருவேங்கடமுடையான் திருவடிக ளிலே கைங்கர்யமான பேற்றை அறிதலே நம் போல்வார்க்கு வேதாந்த வாக்யமாகும்.

– திரு. பி.டி. சேஷாத்திரி, சென்னை, 99404 28830

# பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள்

## ஸ்ரீ நடாதூர் அம்மாள் அருளிய ஹேதிபுங்கவஸ்தவம்

உ.வே. டாக்டர் அனந்தபத்மநாபாசாரியார்,
சென்னை, 99620 11293.

ஸ்ரீ நடாதூர் அம்மாள் எனும் ஸ்வாமி திவ்ய தேசங்கள் தோறும் யாத்திரையாகச் சென்று ஆங்காங்கு பெருமாள்களை தரிசனம் செய்து வந்தார். ஒரு சமயம் திருக்குடந் தைக்கு வருகை புரிந்தார். ஆராவ முதனின் அத்யத்புதமான அழகில் ஈடுபட்டு பல மாதங்கள் அங்கேயே தங்கியிருந்து பெருமாளை சேவித்து மகிழ்ந்திருந்தார்.

அவ்வூரில் சுந்தனன் எனும் ஒரு அந்தணன் வாழ்ந்து வந்தார். திடீ ரென்று ஒரு நாள் அவரை ஒரு பிசாசு பிடித்து ஆட்டு வித்தது. எத்தனையோ மந்திர, தந்திர வைத்தி யங்கள் செய்தும் சுந்தனனுக்கு குணமாகவில்லை. அம்மாளின் அரும்பெருமைகளை கேள்வியுற்று சுந்தனனின் குடும்பத்தினர் அவரிடம் வந்து வேண்டினர்.



திருக்குடந்தையின் தெய்வமான திருவாழி (சுதர்சன) ஆழ்வானைத் துதித்து “ஹேதி புங்கவ ஸ்தவம்” எனும் சக்தி வாய்ந்த ஸ்தோத்ரத்தை அருளினார் அம்மாள். சுலோக ரூபமாக வும் இல்லாமல், வாக்ய ரூபமாகவும் இல்லாமல் சிறு சிறு பகுதிக ளாக முப்பத்திரெண்டு வாக்யங்களாக “சிறு இலக்கியம்” எனும் தொகுதியில் இந்த ஸ்தோத்ரம் அமைந்துள்ளது. இதன் ஒவ் வொரு வாக்யமும் “ஜய ஜய” என சக்கரத்தாழ்வானைப் போற்றி போற்றி என்று ஆரம்பிக்கிறது. சிறு வயதில் நடாதூர் அம்மாளின் பூரண அனுக்ரஹம் பெற்ற ஸ்வாமி தேசிகனும் இதனை அடியொற்றியே “ஜய ஜய ஸ்ரீசுதர்சனா” என சுதர்சனாஷ்டகம் அருளினார்.

இந்த ஸ்தோத்திரத்தின் மகிமையால் சுந்தனனைப் பிடித் திருந்த பிசாசு நீங்கி, அவரும் நல் நிலையை அடைந்தார். இவ்வாறு சில நாட்கள் சென்ற பின்பு மீண்டும் காஞ்சிக்கு கிளம்பினார் அம்மாள். அவ்விதம் வரும் வழியில் ஆரணி, ஆற்காடு அருகே ஒரு கிராமத்தில் இளைப்பாற நேரிட்டது. அவரின் சிஷ்யர்கள் சுதர்சனர், அப்புள்ளார் முதலானவர்கள் உடன் இருந்தனர். அவ்வூரில் லாடன் எனும் மந்திரவாதி பெரும் செல்வாக்கு பெற்றவனாகத் திகழ்ந்தான். அவ்வூருக்கு யார் வந்தாலும் இந்த லாடனிடம் உதவி கேட்பர். அவனது தயவின்றி அவ்வூரில் எவரும் எதுவும் செய்ய முடியாது.



ஆனால் எம்பெருமானையும் அவனது அடியார்களையும் தவிர்த்து வேறொருவருக்கும் ஆட்படாதவர்களான அம்மாளும் அவர்தம் சிஷ்யர்களும் லாடனைத் துளியும் லட்சியம் செய்யவில்லை. கோபமுற்ற லாடன் தனது மந்த்ர சக்தியினால் குட்டிச்சாத்தான் போன்ற பூதத்தை இவர்கள் மீது ஏவினான். அம்பரீஷனை அழிக்க துர்வாசர் ஏவிய பூதம் போன்று லாடனின் பூதம் நெருங்கியது. தான் ஏற்கெனவே அருளிய "ஹேதி புங்கவ ஸ்தவம்" அதாவது சுதர்சன ஸ்தோத்திரத்தை அம்மாள் மீண்டும் ஜபிக்க, அந்த குட்டிச்சாத்தானை சுதர்சன சக்ரம் பயங்கரமாகத் தாக்கியது.

அலறித்துடித்த பூதமும் தன்னை ஏவிய லாடனையே திருப்பித் தாக்க ஆரம்பித்தது. சுதர்சன மந்த்ர சக்தி அவ்வளவு பெருமை பெற்றதாகும். பயந்து நடுங்கிய லாடன் ஓடி வந்து அம்மாளின் திருவடிகளில் தஞ்சம் புகுந்தான். தன்னைக் காக்கும் படி வேண்டினான். தனது தவறுக்கு மனமுருகி மன்னிப்புக் கோரினான். தனது செல்வம் அனைத்தையும் அவருக்கே அர்ப்பணித்தான்.

இப்படி அதிசயம் நடந்த ஊர் இன்றும் "லாட வரம்" எனும் பெயருடன் விளங்குகிறது. சித்திரை மாதம் சித்திரைத் திருநாள் அம்மாளின் பிறந்த தினம். சித்திரை நக்ஷத்திரம் சுதர்சன நக்ஷத்திரம் முழு பௌர்ணமி தினமான இந்த நன்னாளில், இந்த ஸ்த்ரோத்திரத்தை பாராயணம் செய்தால் ஏவல், பில்லி, சூன்யம் முதலிய தொந்தரவுகள் விலகும்.

ஜய ஹேதீச லக்ஷ்மீச பாஹ்வலங்கார பூத ।
ஜய பஞ்சாயுதீமுக்ய நிர்தக்தகாசீபுர ।
ஜய விஷ்ணுஹ்ருத் தத்வஸஞ்ஜாத சக்ரஸ்வரூப ।
ஜய விஷ்ணுமூர்த்திஷு ஸர்வாஸு விக்யாத சின்ஹ ।
ஜய விஷ்ணுதாஸ்யதானக்ஷமஞ்ரீஷடக்ஷர ।
ஜய ஸம்ஸ்பர்ச நிர்தக்தஸர்வாக வாராம் நிதே ।
ஜய கர்பஸம்ஸ்பர்சஜாதகாஷ்டா குமார ।
ஜய விப்ரசித்யாஸுரீ கல்பனாகல்பஸுர்ய ।
ஜய தாபேன யஸ்த்வாம் வஹன் கர்ம யேக்ய: ।
ஜய ஹரிஸ்த்வாம்ததத் ஸவ்யபாணௌயுத்த யோக்ய: ।
ஜய தேவாச்ச மஸ்தேஷு தவாம்ததுர் வேதபூதா: ।
ஜய பாஸா விருந்தன் பாஸாம் பதிம் ராத்ரிமாதா: ।
ஜய ஸர்வைனஸாம் தாரணம் யத் விசின்ஹம் தவ ।
ஜய கிருஷ்ணார்ஜுனாபீஷ்டவிப்ரக்தியா தேஜஸா ।
ஜய யஸ்யமூர்த்திர் பவச்சின்ஹிதா தஸ்ய முக்தி: ॥
ஜய யேனங்கிதாஸ்தே பத்யமானா: பாசஹஸ்தை: ॥
ஜய ஸம்ஸ்கார முக்யார்ய பாச்சாத்ய துக்தாபிஷேக ।
ஜய சங்காஸி கௌமோதகீ சார்ங்க ஸுப்ராத்ருபாவ ।
ஜய மாலே: ஸுமாலேச்ச நக்ரஸ்ய க்ருத்தாஸ்யகண்ட ।
ஜய ரக்ஷோஸுராணாம் தநூபாத்தரக்தார்த்ர மால! ।
ஜய வித்ராவிதோ த்வேஷக்ருத பௌண் ட்ரகஸ் தேஜாஸா தே ।
ஜய வித்வேஷிணி தாஹ மாஸாதிதா கோட்டவீஸா।
ஜய ஹரிஸ்த்வம் பரீஷம் ஹிரக்ஷன் பவந்தம் வ்யதாத் ।
ஜய தூர்வாஸஸம் த்வம் பரா ஜிக்யிஷேதஸ்ய ஹேதோ: ॥
ஜய வேதாச்ச தைவம் பரம் மன்வதே த்வாம் வஹந்தம் ।
ஜய ஹேதிஷு ஸத்ஸ்வேவ ஹந்தாரிபூணாம் த்வமேவ ।
ஜய தேவ ஹேதிசின்ஹேஷு ஸர்வேஷுமுக்யோ பவான் ।
ஜய விஷ்ணுபக்தேஷு தாஸ்யப்ரதானம் த்வையாங்கனம் ।
ஜய வீலாவிஹாரே சோத்ஸவே சரஸ்யக்ரணீஸ்தவம்।
ஜய தைவாஸுரே ஸங்கரே ரக்தபுக் நிர்பயஸ்தவம்।
ஜய தர்சயாத்மபாஸா விரோதீன்யகானித்வம் நுத ।
ஜய தேஹி விஷ்ணுலோகம் ஏவம்விதே பக்திஹீநே ॥
ஸுதர்சன ஸ்தோத்ரமிதம் வரதார்யேண நிர்மிதம்।
படன் ஸித்யதி வைஸத்ய: நபயம் தஸ்ய ஹி க்வசித்॥

கருத்துரை :

எம்பெருமானின் பதினாறு ஆயுதங்களுக்கும் தளபதியே! மஹா லட்சுமியின் திருக்கரங்களில் தெய்வீக ஆயுதமென அலங்கரிப்பவனே! விலை மதிப்பற்றவனே! உமக்கு வணக்கம். உமக்கு மங்களம் உண்டாகட்டும்!



ஐந்து ஆயுதங்களில் மிக முக்கியமானவரான உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

காசி நகரத்தை எரித்து, அந்த நகரத்தின் மன்னனை தண்டித்தவனே! உமக்கு மங்களம் உண்டாகட்டும்!

ஓ சுதர்சனா! விஷ்ணுவின் திருவுள்ளப்படி சக்கர வடிவத்தில் விளங்குபவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

விஷ்ணுவின் அர்ச்சா மூர்த்திகளில் மிகவும் மதிப்பிற்குரிய சின்னமாக விளங்குபவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்.

ஆறு அக்ஷரமான புனிதமான மந்த்ர ரூபத்தில் மதிப்பிற்குரிய சின்னமாக விளங்குபவனே! விஷ்ணுவின் பக்தர்களுக்கு கைங்கர்யத்தை பெற்றுத் தருபவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

உன்னுடைய ஸம்பந்தத்தினாலும், எண்ணத்தினாலும் எங்களுடைய பாவங்களை அடித்தளமாகக் கொண்ட வலிமை மிக்க கடலை உலர்த்துபவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

உத்திரையின் கர்பத்தில் எரிந்த மர கட்டையைப் போல் விளங்கிய பரீக்ஷித்தை ஸ்பர்சத்தால் காத்தவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

சாஸ்திரங்களுக்கு தவறான அர்த்தங்களை கூறுபவர்களை சூரியன் போல் சுட்டெரிப்பவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

கர்ம யோகத்தின் மூலம் பகவானை அடைய வழி வகுப்பவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்! சக்தி வாய்ந்த போர் வீரனான ஹரியின் இடது திருக் கரங்களில் விளங்குபவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

பாரதப் போரில் உன்னுடைய தேஜஸினால் சூரியனை மறைத்து பகலை இரவாக்கியவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

அறிவார்ந்த செயலினாலும், பிரகாசத்தின் மூலமாகவும் குரு க்ஷேத்திரத்தின் போர்க்களத்தில் கிருஷ்ணர் மற்றும் அர்ஜுனனின் தீவிர ஆசைகளை நிறைவேற்றியவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

திருச்சின்னமாக உன்னை தரிப்பவர்களுக்கு மோக்ஷத்தை பெற்றுத் தருபவனே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்!

*ஹேதி புங்கவஸ்தவம் நிறைவுற்றது.*




**திருமலையப்ப ஸ்வாமிக்கு வருடந்தோறும் நடைபெறும் உற்சவங்களில் "வஸந்தோத்ஸவம்" சிறப்பான நிகழ்வாகும். இந்த உற்சவம் சித்திரை மாதத்தில் பௌர்ணமி அன்று நிறைவடையும் வகையில் மூன்று நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும் ஒரு வைபவமாகும். பல்வேறு சுகந்த திரவியங்களால் மூன்று நாட்களும் ஸ்ரீதேவி பூதேவி சமேத திருமலையப்ப ஸ்வாமிக்கு அபிஷேகமும், ஆராதனைகளும் நடைபெறும்.**

57

# 108 திவ்விய தேச வைபவம்


# ஸ்ரீவில்லிபுத்தூர்

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

பகவான், ஸ்ரீவராஹமாக அவதாரம் எடுத்தபோது, உலக மக்கள் ஆசாபாசங்களைத் துறந்து உய்வதற்கு வேண்டிய பல தர்மங்களை பூமிதேவிக்கு இங்கு தான் உபதேசித்தான் என்று ஸ்ரீவராஹ புராணம் சொல்கிறது.

சுதபஸ் என்கிற மஹரிஷி அழகர் மலையில் நூபுர கங்கையில் பகவானை நினைத்து நீராடி அவர் நினைவாகவே இருந்த நேரத்தில் அங்கு வந்த துர்வாசர் அவருடைய சீடர்களை வரவேற்று உபசரிக்காததால், தவளையாகப் (மண்டூகம்) போகுமாறு சபிக்கப்பட்டு, சாபவிமோசனம் கேட்கும் போது, அருகில் உள்ள தர்மாத்ரியில் தபஸ் செய்யுமாறு சொல்ல, அங்கு தவம் செய்யும் போது சுந்தரராஜன் ஆகிய பகவான் நேரே தோன்றி இவர்களுக்கு சாப விமோசனம் அருளி அங்கேயே நித்ய வாசம் செய்யத் திருவுள்ளம் கொண்டதாக வரலாறு சொல்கிறது.



ஒரு முறை, சத்ய லோகம் சென்ற கங்கை, யமுனை, சரஸ்வதி நதிதேவியர் மூவரும் பிரம்மாவைத் துதிக்க அங்கு அப்போது வந்த ரிஷிகளில் சிலர் கோதாவரியின் பெருமையை எடுத்துச் சொல்ல, அந்தப் பெருமையைப் பெறும் பொருட்டு பிரம்மா அறிவுரைப்படி வராஹ க்ஷேத்திரமாகிய இங்கு வந்து தபஸ் செய்தனர். சுதபஸ் மஹரிஷி தபஸ் செய்த இடத்தில் காலநேமி என்கிற அசுரன் வந்து இந்த ரிஷியையும் தபஸ் செய்யும் மற்ற ரிஷிகளையும் துன்புறுத்தினான்.

அவர்கள் பகவானை வேண்ட, பகவான் கருட வாகனத்தில் வந்து, சக்கரத்தால் அசுரனை அழித்து ரத்தக் கறை படிந்த சக்கரத்தைக் கழுவ கங்கை, யமுனை, சரஸ்வதி மூவரையும் (இங்கு தபஸ் செய்த) ஒரு பெரிய குளமாக்கி, அந்தத் தீர்த்தத்தில் சக்ராயுதத்தைச் சுத்தப்படுத்தினார்.

இம்மூன்று நதிகளும், கோதாவரியைப் போன்ற பெருமை பெற்றது என்றும், இம்மூன்று நதிகளும் ஒன்றான பெருங்குளமே “திருமுக்குளம்” எனப்படுகிறது என்றும் சொல்வர். தேவர்கள் வேண்ட, பகவான், இங்கு “வடபத்ரசாயி” யாக எழுந்தருளினார். இந்தக் குளக்கரையில் தான் ஸ்ரீவிஷ்ணு சித்தர் (பெரியாழ்வார்) அவதாரம். முகுந்தர் என்கிற வைணவருக்கும் அவர் தர்ம பத்னி பத்மாவுக்கும் ஐந்தாவது குமாரராக, பகவானின் கட்டளைப்படி கருடனே, ஸ்ரீவிஷ்ணு சித்தராக அவதாரம்.



கங்கைக்கரையில், பல மஹரிஷிகள் தபஸ் செய்து கொண்டிருந்தனர். அவ்வப்போது வேதாந்த விசாரங்கள் செய்வார்கள். இப்படி நடந்து கொண்டிருந்த போது, ஒரு நாள் ஒரு புதியவர் வேடுவர் வடிவில் இவர்கள் கூட்டத்துக்கு வருகிறார். தோற்றத்தைப் பார்த்து, அவரை வெளியே விரட்டுகிறார்கள். முனிவர்களில் இருவர் அவரைக் கொலை செய்யவும் துணிகிறார்கள். ரிஷிகளின் ஆசார்யன் அங்கு வந்து, வந்தவரின் மேதையை அறிந்து ரிஷிகளையும் அழைத்துக் கொண்டு அவர் இருப்பிடம் சென்று மன்னிக்க வேண்டுகிறார். வந்த அந்த வேடுவர் இந்த ரிஷிகள் அடுத்த பிறவி எடுத்து நல்ல பாண்டித்யம் பெற்று முக்தி அடைவர் என்றும், தன்னைக் கொல்லத் துணிந்த இருவர் வேடர்களாகப் பிறந்து, பிறகு முக்தி அடைவர் என்றும் கூறுகிறார்.

இங்கே ஸ்ரீவில்லிபுத்தூர் – அடர்ந்த காடாக இருந்தது. வில்லி, கண்டன் என்ற வேடுவச் சகோதரர் ஒரு நாள் காட்டில் மிருகங்களை வேட்டையாடும்போது கண்டன் என்கிற வேடுவன் ஒரு புலியைத் துரத்திச் சென்று, அந்தப் புலி தாக்கி இறக்கிறான். அச்சமயம் பகவானை நினைத்ததால் முக்தி அடைகிறான். "வில்லி" தம்பியைத் தேடிக் களைத்து காட்டில் ஒரு இடத்தில் உறங்கும்போது வடபத்ரசாயியான பகவான் அவன் கனவில் வந்து, கண்டன் முக்தியையும், புலி இறந்த குகையையும், அங்குள்ள பெரும்புதையலையும் உணர்த்தி, அந்தப் பெருஞ்செல்வத்தால் தனக்குக் கோயில் கட்டப் பணிக்கிறார். வில்லி, "விழித்தெழுந்து, புலி இறந்த இடம் சென்று அங்கு செல்வப் புதையலைக் கண்டு அதை எடுத்து, பாண்டிய மன்னர்களின் உதவியோடு பெரிய கோயிலைக் கட்டுகிறான். வடபத்ரசாயி, வடபெருங்கோயில் உடையான் ஆகிறான். வில்லியால் அமைக்கப்பட்ட ஊர் வில்லிபுத்தூர் ஆயிற்று. புற்று – வில்லி இருந்த இடம் என்பதால் ஸ்ரீவில்லிபுத்தூர் என்றும், இந்த நாடு வில்லியின் தாயின் பெயரால் "மல்லி நாடு" ஆயிற்று என்றும் சொல்வர்.

கருட பகவானே, விஷ்ணு சித்தராக அவதாரம் எடுத்து "விரஜை" என்பவளை மணந்தும் பிரம்மசர்யத்தைக் கடைப்பிடித்து துளசி வனம் அமைத்து புஷ்பச் செடிகளை நட்டு, பகவானுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து வரலானார்.

மதுரையில் ஸ்ரீவல்லப தேவன் என்கிற பாண்டிய மன்னன், ஆத்மா உய்வதற்கு வழி என்ன என்று வேதாந்த விசாரத்தைச் செய்து பல பண்டிதர்களை சபைக்கு வரவழைத்தான். தனது ஐயத்தைத் தெளிவிப்பவர்களுக்கு "பொற்கிழி" அளிக்கப்படும் என்று அறிவித்தான். பல பண்டிதர்கள் முயன்றும், அந்தப் பொற்கிழி உள்ள கம்பம், குனியவில்லை. இங்கு விஷ்ணு சித்தர் கனவில் பகவான் தோன்றி, வாதத்தில் வென்று பொற்கிழியோடு வருமாறு பணிக்க, ஸ்ரீவிஷ்ணு சித்தரும் பாண்டிய மன்னன் சபையில் "நாராயணனே பரதத்வம்" என்பதை ஸ்தாபித்து, பொற்கிழி அவர்கையில் விழ, மன்னன், விஷ்ணு சித்தரை யானை மீதேற்றி நகர்வலம் வந்து பெருமைப்படுத்த, அப்போது ஆகாயத்தில் பகவான் கருடராகத் தோன்ற, பகவானை சேவித்த விஷ்ணு சித்தர், பகவானுக்குக் கண் எச்சில் படாதிருக்க "திருப்பல்லாண்டு" பாடினார்.

பூமி தேவியும், தன் குழந்தைகளாகிய மக்கள் ஜீவாத்மாக்கள் கடைத்தேற வேண்டுமென்று

விஷ்ணு சித்தரான பெரியாழ்வாருக்கு துளசி நந்தவனத்தில், துளசிச் செடி அடியில் ஐந்து வயது பெண் மழலையாகத் தோன்றி, பெரியாழ்வாரையே ஆசார்யனாக வரித்து, வட பெருங்கோயில் உடையானுக்கு, தான் சூடிக் களைந்த மாலையை அனுப்பி, சூடிக் கொடுத்தவளாக ஆகி, பெரியாழ்வாரால் திருவரங்கம் அழைத்துச் செல்லப்பட்டு திருவரங்கச் செல்வனை நாயகனாக மணக்கிறாள்.

திருமணக் கோலத்தை, ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே சேவிக்கலாம். முதலில் ஆண்டாள். அடுத்து ரங்க மன்னார், அவருக்கு அருகே அடுத்தாற்போல் கருடன், பெரியாழ்வார் கருடாம்சராக அவதாரம் அல்லவா? இவ்வளவு வரலாற்றுப் பெருமை மிக்க திவ்ய தேசம்.

**சிறப்புகள் :**

*16* திருக்கரங்களுடன் சக்கரத்தாழ்வான் தனி சன்னதியில் இங்கு சேவை சாதிக்கிறார். முகலாயப் படையெடுப்பின் போது சிலகாலம், ஆண்டாள் திருவனந்தபுரத்தில் எழுந்தருளி இருந்ததாகவும் அப்போது அங்கு இருந்த சக்கரத்தாழ்வார், ஆண்டாள் ஸ்ரீவில்லி புத்தூருக்குத் திரும்பும்போது இவரும் இங்கு எழுந்தருளினார் என்பர்.



| | | |
|---|---|---|
| **பெருமாள்** | – | வடபத்ரசாயி (ஆலின் இலையான்) விமலாக்ருதி விமானத்தில் கிழக்கு நோக்கிய கிடந்த திருக்கோலம். |
| **ரங்கமன்னார்** | – | ஆண்டாள் சன்னதியில் கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம். |
| **தாயார்** | – | ஆண்டாள் , கோதா நாச்சியார். |
| **தீர்த்தம்** | – | திருமுக்குளம் (திரிவேணி தடாகம்) |
| **ப்ரத்யக்ஷம்** | – | மண்டுக ரிஷி, பெரியாழ்வார். |
| **விமானம்** | – | ஸம்ஸன விமானம்(சௌம்ய விமானம்), விமலாக்ருதி விமானம். |
| **ஆகமம்** | – | வைகானசம். |
| **மங்களாசாசனம்** | – | பெரியாழ்வார், ஆண்டாள். |

**விசேஷம் :**

ஆயர்பாடியை ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகவும், கண்ணனை வடபெருங் கோயிலுடையானாகவும், கோபிமார்களைத் தன் தோழிகளாகவும் ஆண்டாள் பாவித்து, மார்கழி மாதத்தில் விரதம் அனுஷ்டித்து பகவானை அடைந்தாள். விபவ அவதாரம் – இங்கு அர்ச்சாவதாரமாக மேன்மையில் பொலிவுற்றது. இங்கு ஆண்டாளுக்குத் தான் எல்லாவற்றிலும் முதல் மரியாதை. ஏக ஆசனத்தில் ஆண்டாள், அடுத்து ரங்க மன்னார். அடுத்து கருடாழ்வார். இதை “ப்ரணவத்தின்” விளக்கமாகக் கூறுவர்.

இன்னொன்றும் சொல்வர் : ஸ்ரீஆண்டாள் இங்கு முன்னதாக எழுந்தருளி இருப்பது ஸ்ரீராமாநுஜரை “எம் அண்ணரோ நீர்” என்று கேட்டு வந்ததாகச் சொல்வர். இந்தத் திருக்கோயில் கோபுரம் தான் தமிழ்நாடு அரசாங்கத்தின் சின்னம். இங்கும் அரையர் சேவை மிகவும் பிரசித்தம்.



மகாபாரதத்தை தமிழில் பாடலாக அமைத்து அருளிய வில்லிபுத்தூர் பாரதம் எழுதிய வில்லிபுத்தூராரர் ஆழ்வார் வாசம் செய்த திருத்தலம் இது.

பிள்ளை லோகாசார்யார் இத்திருத்தலத்தை "ஸம்பத் ஸம்ருத்தி" என்று கொண்டாடுகிறார். பொன்னும் மணியும் முத்தும் கலந்த "சீர் ஆகும் வில்லிநகர்" பொன்னாக ஸ்ரீரங்க மன்னாரையும் மணியாக கோதை நாச்சியாரையும், முத்தாக பெரியாழ்வாரையும் பெற்றிருக்கும் திவ்ய தேசம் "ஸம்பத் ஸம்ருத்தி" என்று சொல்வர்.

### த்யான சுலோகம்

*தேவ: ஸ்ரீவிஷ்ணுசித்த ப்ரதித புரவரே விஷ்ணு*
*சித்தஸ்ய கந்யாம்*
*கோதாம் உத்வாஹ்ய லக்ஷ்மீம் வஹதி*
*ஹரிரஸௌ ரங்கராஜா பிதாந: |*
*ஸௌம்யம் திவ்யம் விமாநம் ஸுரபதி விநுதம்*
*ஜஹ்நுஜாதி த்ரிதீர்த்தம்*
*பண்டூகாக்யாய வாதாசந வரமுநயே ப்ராங்கமுக:*
*ஸுப்ரஸந்ந: ||*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

### பாசுரம்

*கொடிகள் கோபுரங்கள் ஓங்கு வில்லிபுத்தூரில்*
*கோதை*
*கடிகமழ் கழுநீர் முல்லை, கருமுகை கலந்து காட்சித்*
*தொடையினைக் குழல்மேல் சூடிக் கொடுத்திட*
*மகிழ்ந்த சோதி*
*வடபெருங்கோயில் மேவு மன்னனார் தாள்கள்*
*வாழி"*

– வரதராச பாகவதம்

*"மின் அனைய நுண் இடையார் விரிகுழல் மேல்*
*நுழைந்தவண்டு|*
*இன்னிசைக்கும் வில்லிபுத்தூர் இனிது அமர்ந்தாய்*
*உன்னைக் கண்டார் ||*
*என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப்*
*பெற்ற வயிறுடையாள் |*
*என்னும் வார்த்தை எய்து வித்த இருடீகேசா!*
*முலை உணாயே ||"*

–பெரியாழ்வார்

*"மென் நடை அன்னம் பரந்து விளையாடும்*
*வில்லிபுத்தூர் உறைவான் தன்*
*பொன்அடி காண்பதோர் ஆசையினால், என்*
*பொருகயற் கண்ணிணை துஞ்சா*
*இன்அடிசிலொடு பால் அமுது ஊட்டி எடுத்த என்*
*கோலக்கிளியை*
*உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே!*
*உலகு அளந்தான் வரக்கூவாய்"*

– ஆண்டாள்

*"குறித்து ஒருவர் கொண்டாடும் கொள்கைத்தோ*
*கோதை*
*நிறத்த ஊர் விண்டு சித்தர் நீடுர் - பிறப்பிலி ஊர்*
*தாழ்வில்லி! புத்தூர் என்ற ஐவர்க்குத் தான்*
*இரந்தான்*
*வாழ் வில்லி புத்தூர் வளம்!"*

– பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்

### நாமாக்கள்


521. *ஓம் அநந்தாத்மா நம:*
(ஆதி சேஷனுக்கு ஆத்மாவாக இருப்பவனே)
*ஓம் ஜயந்த்யை நம:*
(தான் சங்கல்பித்த எவற்றிலும் ஜயிப்பவளே)

## சாஸ்த்திர நீதிகள்–88

துர் ஜந்துபிர் ஆக்ராந்தோ கர்ஜந் கடு கோத்ர கோபன ஸமர்த்த:|
ஜலதி ராஜத் கர்வ: கும்பீ பாகோதரே பரி ப்ரமதி ||

சமுத்திரத்தில் மிகவும் ஜாக்கிரதையுடன் ஸ்நாநம் செய்ய வேண்டும். சுறா மீன்கள், திமிங்கிலம் இருப்பதால். துஷ்ட சஹவாஸம் உள்ளவர்களோடு பழகும்போது மிகவும் நிதானமாகப் பேசி பழகணும்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



522. *ஓம் மஹோததிஸய: நம:*
(பெருங்கடலில் சயனித்து இருப்பவனே)
*ஓம் கட்கதாரிந்யை நம:*
(விஜயலக்ஷ்மியாக உபாசிப்பவர்களுக்கு வாள் ஏந்தி காக்ஷி தருபவளே)

523. *ஓம் அந்தக: நம:*
(ப்ரளயத்தில் உலகங்களை அழிப்பவனே)
*ஓம் ஸர்வார்த்தி நாசிந்யை நம:*
(அனைவருடைய துயரத்தையும் போக்குபவளே)

524. *ஓம் அஜ: நம:*
(அகாரத்தின் பொருளே)
*ஓம் ஹ்ருஷ்டாயை நம:*
(பிறர்த் துக்கத்தைப் போக்கிய பிறகே மன மகிழ்ச்சியை அடைபவளே)

525. *ஓம் மஹார்ஹ: நம:*
(ஆத்மாவை அர்ப்பித்துப் பூஜிக்கத் தக்கவனே)
*ஓம் ஸர்வேச்சா பரிபூகாயை நம:*
(எல்லாருடைய எல்லா ஆசைகளையும் நன்கு பூர்த்தி செய்பவளே)

526. *ஓம் ஸ்வாபாவ்ய: நம:*
(ஸ்வாமியே)
*ஓம் ஆர்யாயை நம:*
(பெருந்தன்மை உடையவளே)

527. *ஓம் ஜிதாமித்ர: நம:*
(பகைவர்களை வென்றவனே)
*ஓம் யசோதாயை நம:*
(புகழை அளிப்பவளே)

528. *ஓம் ப்ரமோதந: நம:*
(தன் அடியார்களை மகிழ்வித்து அதைக் கண்டு மகிழ்பவனே)
*ஓம் வஸுதாயை நம:*
(செல்வத்தை அளிப்பவளே)

529. *ஓம் ஆநந்த: நம:*
(பேரானந்தம் உள்ளவனே)
*ஓம் தர்மகாமார்த்த மோக்ஷதாயை நம:*
(அறம், பொருள், இன்பம், வீடு நால்வகைப் பயன்களையும் அளிப்பவளே)

530. *ஓம் நந்தந: நம:*
(ஆனந்த சாதனமான பொருட்கள் அனைத்தும் நிரம்பியவனே)
*ஓம் த்ரிசூலின்யை நம:*
(த்ரிசூலம் என்கிற ஆயுதம் தரிக்கும் பெருமாளுடன் எப்போதும் சேர்ந்து இருப்பவளே)

ஸ்ரீ வடபத்ரசாயிநே நம:
ஸ்ரீமதே கோதா தேவீ ஸமேத
ஸ்ரீரங்கநாத பரப்ரம்மணே நம:

குறிப்பு : மதுரை - தென்காசி நெடுஞ்சாலையில் இவ்வாலயம் உள்ளது.

முக்கியக் குறிப்பு : இங்கு நெடிதுயர்ந்த மலையில் (திருவண்ணாமலை) நின்ற திருக்கோலத்தில் ஸ்ரீநிவாசன் சேவை அளிக்கிறார். திருமுக்குளம் வழியாக மலைப்படிகளில் ஏறிப்போக வேண்டும்.

திவ்ய தேச வைபவம் வளரும்...

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் ...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி ...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயண வனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

## சேனை முதலியார் வாழித்திருநாமம்...

சேனை முதலியார் ஐப்பசி பூராடத்தில் அவதரித்தவராவர்.

*ஓங்கு துலாப்பூராடத்து உதித்த செல்வன் வாழியே*
*ஒண்டொடியாள் சூத்திரவதி உறைமார்பன் வாழியே*
*ஈங்கு உலகில் சடகோபற்கு இதமுரைத்தான் வாழியே*
*எழிற் பிரம்பின் செங்கோலை ஏந்துமவன் வாழியே*
*பாங்குடன் முப்பத்துமூவர் பணியுமவன் வாழியே*
*பங்கயத்தாள் திருவடியைப் பற்றினான் வாழியே*
*தேங்குபுகழ் அரங்கனையே சிந்தை செய்வோன் வாழியே*
*சேனையர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே*

**பதவுரை**

ஓங்கு துலா – உயர்ந்த துலா மாதத்தில், பூராடத்து – பூராட நக்ஷத்திரத்தில், உதித்த – அவதரித்த, செல்வன் – கைங்கர்யமாகிற செல்வத்தைப் பெற்ற சேனை முதலியார், வாழியே – வாழ வேண்டும்; ஒண்தொடியாள் – முன் கைவளை கழலா இருக்குமவளான, சூத்திரவதி – சூத்திரவதி என்னும் பத்னியை, உரைமார்பன் – நெஞ்சில் இருப்பிடமாகக் கொண்டவர்; ஈங்கு – இங்கு, உலகில் – உலகத்தில், சடகோபற்கு – நம்மாழ்வாருக்கு, இதம் – நன்மையை, உரைத்தான் – உபதேசித்தவர்; எழில் – அழகான, பிரம்பின் – பிரம்பினாலான, செங்கோலை – அரசாட்சி சின்னமாகிய நேர்கோலை, ஏந்துமவன் – கையிலே வைத்திருப்பவர்; பாங்குடன் – அழகுடன், முப்பத்து மூவர் – முப்பத்துமூன்று தேவர்களால், பணியுமவன் – வணங்கப்படுபவர்; பங்கயத்தாள் – தாமரைப்பூவில் பிறந்த பெரிய பிராட்டியார், திருவடியை – திருவடிகளை, பற்றினான் – பற்றுபவர்; தேங்கு புகழ் – நிறைந்த புகழையுடைய, அரங்கனையே – ரங்கநாதனையே, சிந்தை செய்வோன் – மனத்தில் எண்ணுமவர்; சேனையர் கோன் – சேனையர்களுக்குத் தலைவனானவர், செங்கமலம் – சிவந்ததாமரை போன்ற, திருவடிகள் – திருவடிகள், வாழியே – வாழ வேண்டும்.

(சிறப்புரை) *''ஓங்கு துலாப்பூராடத்து உதித்த செல்வன்''* ஓங்கு துலா – உயர்ந்த துலா மாதம். துலா மாதத்துக்கு உயர்வாவது – அசுவனி நக்ஷத்ரமும் பௌர்ணமியும் கூடிய நாள் துலா மாதப் பிறப்பாகும். ஆஸ்வயுஜ மாதமாகும். அத்தகைய மாதத்தில் ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைக்கு ப்ரதானரான சேனை முதலியார் பூராட நக்ஷத்ரத்தில் அவதரித்தார். அதனால் *''ஓங்கு துலா பூராடம்''* என்று கொண்டாடப் படுகிறது. மேலும் இம்மாதம் முதலாழ்வார்கள் மூவரும் அடுத்தடுத்த நக்ஷத்ரத்தில் தோன்றிய பெருமையுடையதாகும். ஆசார்யர்களில் பிள்ளை லோகாசார்யர், மணவாளமாமுனிகள் ஆகியோர் அவதரித்த உயர்வாகும். சேனை முதலியாருக்குச் செல்வமாவது – எம்பெருமானுடைய அமுது செய்து மிகுந்த மிச்சத்தை உண்பதாகும். இது இவருக்கு தாரகம். எல்லாருக்கும் அன்பன். இது பற்றியே ஆளவந்தார் *''த்வதீய... ப்ரியேண ஸேநாபதி''* என்று சுலோகமிடுகிறார் (ஸ்தோ.ர.42). இராமாநுசர் ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் *''ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே ந்யஸ்த ஸமஸ்த ஆத்மைச்வர்யம்''* என்று அருளியபடியே கைங்கர்யச் செல்வத்திற்கு இட்டுப் பிறந்த சேனைமுதலியாரிடத்தில் எம்பெருமான் தம்முடைய எல்லா நியமனச் செல்வத்தையும் வைத்திருப்பவர் என்று அருளியது காண்க. மேலும், மற்றுமுள்ள திருவனந்தாழ்வான், கருடன் போலே நியமமில்லாமல், ஸர்வேச்வரன் அமுது செய்த

மிச்சம் ஒழிய அமுது செய்யாத நியமத்தைக் குறித்து சேஷாசனர் என்று சேனை முதலியாரை நிரூபிக்கிறது என்று தத்வத்ரய வியாக்யானத்தில் (சூ.45) உரைப்பர் மாமுனிகள். கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் (72) *"வந்த்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய ப்ரபுக்த சிஷ்டாசீ ஸந்"* என்று அருளியதற்கு ஏற்ப அர்ச்சாவதாரத்தில் திருமாலிருஞ்சோலை அழகருடைய போனகத்தின் மிகுந்த மிச்சத்தை உண்பாராய் சேனை முதலியாருக்கு சேஷாசநன் என்றே திருநாமமாயிற்று என்பர்.


*(ஒண்டொடியாள் ஸூத்ரவதி உறைமார்பன்)* ஒண்தொடியாள் – தொடி என்பது முன் கை வளை. அதுக்கு ஒண்மையாவது – கையிலிருந்து கழலா திருக்கை. ஒண்மை – அழகு. அழகிய கை வளையை உடையவள். மேலும் பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவ பூர்வ சதகத்தில் (54) சூத்ரவதியானவள் பெரிய பிராட்டி யாருடைய திருவடியிலே இட்ட செம்பஞ்சுக் குழம்பினால் அடையாளம் இடப் பெற்றதாய், கைங் கர்ய உபயோகியான திருவொற்று ஆடையினால் விளங்குமதான கொடி போன்ற அழகையுடையவள் என்றும், சேனை முதலியாரின் பிரிய பத்தினியுமாக இருப்பவள் என்றும் உரைப்பர். அப்படிப்பட்டவளை நெஞ்சில் இருப்பிடமாக உடையவர் சேனை முதலியார் என்றபடி. மார்பு – நெஞ்சு, உறை – இருப்பிடம்.

வேதாந்த தேசிகரும் யதிராஜ சப்ததியில் (3) *"வைகுண்ட ஸேநாந்யம் தேவம் ஸூத்ரவதீ ஸகம்"* என்கிறபடியே ஸுத்ரவதீ துணைவனான ஸ்ரீவைகுண்ட ஸேநாதிபதி என்பர். திருமாலிருஞ் சோலையில் ஸுத்ரவதியோடு சேனை முதலியார் அர்ச்சா விக்ரகமாய் எழுந்தருளி சேவை சாதிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*(ஈங்கு உலகில் சடகோபர்க்கு இதமுரைத்தான்)* – ஈங்கு – இங்கு, இவ்விடம். இந்த உலகில் *"ஸேநேச கருணா லப்த திவ்யமந்த்ர த்வய முதா"* என்று குருபரம்பரா ப்ரபாவத்தில் அருளியபடியே நம்மாழ்வாரான சடகோபருக்கு சேனை முதலியார் கருணையினால் துவயம் என்னும் திவ்ய மந்த்ரத்தை உபதேசித்தவராவர். மேலும் பரமபதநாதனுடைய நியமனத்தால் சேனை முதலியார் வந்து மந்த்ரம். மந்த்ரத்தின் பொருள், எல்லா புருஷார்த்தங்கள், திராவிட வேதங்கள் முதலானவற்றை பிறர் காதில் படாதபடி உபதேசித்து திவ்விய ஞான ஸம்பந்த ராக்கினார் என்றும் கூறும்.

வாழித்திருநாமம் வளரும்...

# கண்ணன் கருத்துரை



*அசோச்யானன்வசோ சத்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸே ।*
*கதாஸூனகதாஸூம்ச்ச நானுசோசந்தி பண்டிதா: ॥*

(2-11)

**அருச்சுனா! பெரிய ஞானியைப் போல தருமப் பிரசங்கம் செய்கிறாய். வருந்த வேண்டாதவருக்காக வருந்துகிறாய். பொதுவாக ஞானிகள் இறப்பவரைப் பற்றியோ இருப்பவரைப் பற்றியோ வருத்தப்பட மாட்டார்கள்.**

**தொகுப்பு : அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.**





# மாதுளம்பழம்

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156

***************

உணவுப் பொருட்களில் ஒன்றான பலவித மருத்துவ குணங்கள் கொண்ட மாதுளம் பழத்தை உண்போம். மாதுளம் பழத்தில் மட்டுமின்றி அதன் தோல், இலை, பூ, பட்டை போன்ற அனைத்து பாகங்களும் அபூர்வ மருத்துவ குணம் கொண்டது என்று நம்மில் பலருக்குத் தெரியாது.

சமஸ்கிருதத்தில் தாடிமா என்றும், ஆங்கிலத்தில் பொமேக்ரேனேட் என்றும் அழைக்கப்படுகின்றது. இது "ப்யுனிகேசி" என்ற தாவரக்குடும்பத்தைச் சார்ந்தது. இதன் அறிவியல் பெயர் "ப்யூனிகா க்ராநேடம்".

### புளிப்பு ஏப்பம், வயிற்றுவலி நீங்க :

காய வைத்த மாதுளம்பழத் தோலின் பொடி 100 கிராம், எரித்த புதினா இலைப் பொடி 25 கிராம், இந்துப்பு 25 கிராம் ஆகிய வற்றை கலந்து வைத்துக் கொண்டு, நாள் தோறும் 2 முறை 100 மி.லி. நீரில் 2 கிராம் பொடியை கலந்து உட்கொள்ள வேண்டும். இவற்றினால் வயிற்றில் வாயு, செரிமானக் கோளாறு, வாந்தி போன்றவை குறையும்.

### சிறுநீரகத்தில் உள்ள கற்கள் கரைய :

25கிராம் கொள்ளினை, 250 மி.லி. நீரில் 1 மணி நேரம் ஊற வைத்து, பின்னர் மிதமான சூட்டில் 125 மி.லி. ஆனவுடன் இறக்கி வடி கட்டி 2 முறையாக பாதி அளவு கஷாயத்தில் 2-3 தேக்கரண்டி அரைத்த மாதுளம் பழ விதையினை அதனுடன் கலந்து உட்கொண்டால் சிறுநீரகத்தில் உள்ள கற்கள் கரையும்.

### பலவிதமான வயிற்றுப்போக்கு குறைய :

மாதுளம் பழத்தோலின் பொடி 75 கிராம், சர்க்கரை 75 கிராம், ஜாதிக்காய் பொடி 2.5கிராம், ஏலக்காய் பொடி 2.5 கிராம் ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு 2 அல்லது 3 வேளை 2-4கிராம் பொடியை 100 மி.லி. மோரில் கலந்து குடித்தால் இரத்தபேதி, சீதபேதி போன்ற பலவிதமான வயிற்றுப்போக்குகள் குறையும்.

### கஷாயத்தின் உபயோகம் :

200 மி.லி. நீரில் 5 கிராம் மாதுளம்பழத்தோலின் பொடியை சேர்த்து 100 மி.லி. நீராகும் வரை கொதிக்க வைத்து ஆறிய பின் வடிகட்ட வேண்டும். இதுவே மாதுளம்பழ கஷாயம்.

வாய், மூக்கு, மலத்துவாரத்தில் இருந்து வரக் கூடிய இரத்தப்போக்கு குறைய இந்த கஷாயத்தை 2 வேளை தயார் செய்து குடிக்க வேண்டும்.

### பெண்களுக்கு வெள்ளைப்படுதல் குறைய :

நாள்தோறும் ஒரு முறை இந்த கஷாயத்தை 2 கிராம் தூய்மையான மஞ்சள் பொடியுடன் கலந்து பிறப்புறுப்பை சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

### மலத்துவாரத்தில் எரிச்சல் நீங்க :

ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை 50 மி.லி. நீரில் 1 மணி நேரம் ஊற வைத்து அந்நீருடன் இந்த கஷாயத்தை கலந்து நாள்தோறும் குடிக்க வேண்டும்.

### பற்பொடி :

100 கிராம் மாதுளம்பழத்தோல் பொடியுடன் 20 கிராம் மிளகுப்பொடி, 10 கிராம் உப்பு கலந்து வைத்துக் கொண்டு பற்பொடியாக உபயோகித்தால் ஈறுகளில் ஏற்படும் வலி, வீக்கம், இரத்தம் கசிதல் ஆகியவை நீங்கும். பற்களும் உறுதியாக இருக்கும்.

**சரும வியாதிகள் குறைய :**

மாதுளம் இலைகளை நன்கு மிருதுவாக அரைத்து சொரி, சிரங்கு, அரிப்பு, படர் தாமரை போன்ற வியாதிகளுக்குப் பூசி வந்தால் சரும வியாதிகள் குறையும்.

**இருமல் குறைய :**

50 கிராம் மாதுளைத் தோலின் பொடியில் 25 கிராம் உப்பு சேர்த்து வைத்துக் கொண்டு காலை மாலை 1–2 கிராம் பொடியை தகுந்தளவு தேன் கலந்து உண்டால் இருமல் குறையும்.

**வயிறு மற்றும் குடலில் உள்ள புழுக்கள் அழிய :**

காலை நேரத்தில் 200 மி.லி. பாலில் 5–10 கிராம் மாதுளம் பழ இலைகளை ஒன்றிரண்டாக நசுக்கிப் போட்டு பாலை நன்கு கொதிக்க வைக்க வேண்டும். ஆறியபின் வடிகட்டி இரு முறையாக குடிக்க வேண்டும். முதலில் 100 மி.லி. பால் குடித்து, இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு மீதியுள்ள 100 மி.லி. பாலை அருந்த வேண்டும். பின்னர் 2 மணி நேரம் கழித்து, 20–30 மி.லி. விளக்கெண்ணெய் குடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் வயிற்றில் உள்ள புழுக்கள் அழியும்.

**நினைவாற்றல் அதிகரிக்க :**

நாள்தோறும் 100 மி.லி. மாதுளம்பழ ரசத்தை 1 அல்லது 2 தேக்கரண்டி தேனுடன் கலந்து உட்கொண்டால் நினைவாற்றல் அதிகரிக்கும்.



**முகம் பளபளப்பாக மாற :**

நாள்தோறும் ஒரு முறை 3 தேக்கரண்டி மாதுளம்பழத் தோலின் பொடியில் அரை தேக்கரண்டி எலுமிச்சை பழ இரசத்தை சேர்த்து முகத்திற்குப் பூசி அரை மணி நேரம் கழித்து, முகத்தை நன்கு கழுவினால் முகம் பொலிவாகவும் பளப்பளப்பாகவும் இருக்கும்.

தாடி மாஷ்டகல் பொடி, தாடிமாவ லேஹியம், பாஸ்கர லவணம் முதலிய ஆயுர் வேத மருந்துகளில் மாதுளம்பழத்தின் பங்கு இன்றியமையாதது.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸ்ரீமத்$_3$யாமுநதே$_3$சிகாத$_3$தி4க$_3$தச்ருத்யந்தயுக்$_3$மாசய:*
*தத்ஸந்தே$_3$சசிகீர்ஷயா நியததீ$_4$: ஸ்ரீசைலபூர்ணோ கு$_3$ரு: ।*
*அந்விஷ்யந் அநுஜாத்$_3$வயோசிதவரௌ ஸ்ரீவேங்கடாத்$_3$ரௌ ஹரே:*
*தீர்த்த$_2$ம் புஷ்பமபீதராண்யுபஹரந்நாஸ்தே ஸ்ம ஸத்$_3$வ்ருத்$_3$த$_4$யே ॥*

(1)

**ஸ்ரீமத்யாமுநாசார்யரிடமிருந்து உபயவேதாந்தங்களின் கருத்தை அறியப் பெற்றவராய், (பவிஷ்யதாசார்யரைக் கண்டு பிடித்து தர்சந ப்ரசாரத்தை அவரிடம் ஒப்புவிக்க வேண்டும் எனும்) அவருடைய ஆஜ்ஞையை நிறைவேற்ற வேண்டும் என்னும் ஒரே குறிக்கோளை உடையவராய், தமது இரு ஸஹோதரிகளுக்கும் தகுந்த வரன்களைத் தேடுகின்றவராய், திருவேங்கடமுடையானுக்குத் தீர்த்தம், புஷ்பம் முதலான திருவாராதனத்திற்கு உறுப்பான உபஹாரங்களை ஸமர்ப்பித்துக் கொண்டு திருமலையிலே திருமலை நம்பி என்னும் ஆசார்யர் வாழ்ந்து வந்தார்.**



**–"ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது**

# ஸ்ரீமத் பகவத்கீதை

**தெலுங்கு மூலம் : திரு.கே.விஸ்வநாத சாஸ்திரி**
**தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி, 94445 82356.**



ஸ்ரீமத் பகவத்கீதையின் உபதேசம் என்னும் கீதாமிர்தத்தை சுவைப் பதற்கு முன்பாக, இவ்வரிய கீதாமிருதம் நமக்காகவே நம்மைக் கருத்தில் கொண்டே சொல்லப்பட்ட விஷயம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இதற்கு சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ள ஒரு சிறு கதையை நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். ஒரு சமயம் பிரம்மா பெரிய அளவிலான சபையைக் கூட்ட எண்ணினார். அந்த சபையில் உறுப்பினர்களாகவும், பார்வையாளர்களாகவும் இருப்பதற் காக தேவர்கள், ராக்ஷசர்கள், மனிதர் கள் என மூன்று வகையான பார்வை யாளர்களுக்கு அழைப்பு விடுத்தார். அழைப்பை ஏற்று வந்திருந்த அனை வரும் அந்தப் பெரிய சபையில் கூடியிருந்தனர். பலரும் அமர்ந்தி ருந்தனர். பிரஜாபதியின் வருகைக்காக காத்திருந்தனர். அவரும் வந்து அமர்ந்த பின்பு சபையும் ஆரம்பமானது. வந்தி ருந்த அனைவரும் பிரஜாபதியைப் பார்த்து, “ஐயா, நீங்கள் எங்களை அழைத்ததின் நோக்கம் என்னவோ என்று கேட்டனர். மேலும், எங்களுக்கு ஏதாவது உபதேசம் செய்யுங்கள் என வும் விண்ணப்பித்தார்கள். ஆனால், அவர் “த த த” என்று மூன்று எழுத்துக் களை உச்சரித்தார். அதைக் கண்டு அங்கிருந்தோர் அனைவரும் பிரஜாபதி குருவுக்கு வணக்கம் சொல்லும் முகமாக மங்கள வாசகங்கள் எதையோ கூறுகிறார் என நினைத்துக் கொண்டனர். பிரஜாபதி எழுந்து சென்று விட்டார். உபதேசம் முடிந்தது. “த த த”. பிரம்மாவும் எழுந்து செல்ல வேண்டியதாகியது. வந்திருந்த அனைவரும் அவரவர்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தனர். பின்பு, இன்று பிரம்மா நமக்கு என்ன உபதேசம் செய்தார் என ஆலோ சிக்கத் தொடங்கினர். தேவர்கள் அனைவரும் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு, நமக்கு என்ன உபதேசம் செய்திருக்கக்கூடும் என சிந் திக்கத் தொடங்கினர். பிரம்மா நம் மனதுக்குள் புகுந்து நாம் என்ன நினைக்கின்றோம் என்பதையும் அறியும் ஆற்றல் பெற்றவர். அவர் மிகவும் உன்னதமான தெய்வமும் கூட ஆவார். நம் மனதில் என்ன உள்ளது என்பது அவருக்குத் தெரியும். மேலும், நாம் எந்த வகை யானவர்கள் என்பதும் அவர் அறிவார். எனவே நமக்குத் தேவை யான உபதேசமே செய்தார். அப்படி என்ன உபதேசம் நமக்கு செய்தார். நாம் தேவர்கள், மிகவும் புண்ணியம் செய்தால் மட்டுமே கிடைக்கக்கூடிய அரிய ஜென்மத்தைப் பெற்றி ருக்கின்றோம். அதனால் தேவர்களாகிய நாம் சற்று அகங்காரமும் கொண்டுள் ளோம். அதை உணர்ந்தே அவர் அகங்காரம் கூடாது என்று நமக்கு உபதேசித்திருப்பாரோ என்று சிந்தித்திருந்தனர். அவர் செய்த உப தேசத்திற்கு “தாம்யத” என்று பெயர். “தாம்யத” என்றால், சற்று புலன டக்கத்தோடும், அகங்காரம் இல்லாமலும் இருத்தல் வேண்டும் என்பது பொருளாகும். எனவே நம்மை உத்தேசித்து தாம்யத என்று உபதேசித்திருப்பார் என தேவர்கள் தீர்மானித்துக் கொண்டனர்.

மேலும், உள்ள இரண்டு “த” க்களுக்கு என்ன பொருள் இருக்கும் என அவர்களுள் கலந்தாலோசிக்கத் தொடங்கினர். பிறகு முடிவாக ஒரு “த” நமக்கு, இரண்டாவது “த” மனிதர்களுக்கு, மூன்றாவது “த” அசுரர்களுக்கு என தீர்மானித்துக் கொண்டனர். இவ்வாறு தேவர்களின் கலந்தாலோசனை முடிந்த பிறகு, அசுரர்களும் பிரம்மா தமக்கு என்ன உபதேசம் செய்திருப்பார் என ஆலோசிக்கத் தொடங்கினர். இவர்கள் ஆலோசித்தும் விவாதித் தும் முடிவாக ஒரு முடிக்கு வந்தனர். அதாவது அசுரர்களாகிய

*மேகமது உச்சியிலே படிந்தபடி ஓடும்!*
*முகிலைக் கண்ட மயில்களெல்லாம் மான்களுடன் ஆடும்!*
*மோகமது மலையேறி மோட்ச நிலை நாடும்!*
*மோதுகின்ற எண்ணங்கூட முகுந்தனையே தேடும்!*
*தாகமது தீர்ந்திடாமல் தொண்டரினம் பாடும்!*
*திருமலையான் உளங்கனிய அவனருளுங் கூடும்!*
*வேகமது காணும் நூற்றி யெட்டுதிவ்ய தேசம்!*
*வேங்கடவா யென்றவுடன் மறையுமெந்தக் கேடும்!*

*திருமலையான் நாதனவன் திருவடியைப் போற்று!*
*தளரவைக்கும் துன்பந்தரும் விதிவலியை மாற்று!*
*திருமலையின் படிதனிலே மனச்சுமையை ஆற்று!*
*திருப்பதியான் கருணையினால் தடம்புரளுங் கூற்று!*

*திருமலையில் வீசுகின்ற தென்றலெனுங் காற்று!*
*திருப்பதியான் திருநாமம் குளுமைதரும் ஊற்று!*
*திருமலையின் பாசுரங்கள் உளமுருகச் சாற்று!*
*தங்கமெனும் நலவாழ்வை விளக்கெனவே ஏற்று!*

*மலையப்பன் அருள்பெறவே திருமலைக்கு வாரும்!*
*மலைபோன்ற துன்பங்கள் மடிந்தொழியும் பாரும்!*
*கலையப்பன் முன்னின்று குறையெல்லாம் கூறும்!*
*கரைந்துவிடும் பனியெனவே கவலைகளும் தீரும்!*
*சிலையப்பன் அழகதனைச் சிந்தனையால் பாரும்!*
*சிதறிவிட்ட செல்வங்களும் சீக்கிரமாய்ச் சேரும்!*
*நிலையப்பன் அவனென்றெ நிம்மதியைக் கேளும்!*
*நிலையான வாழ்வுதரும் அவனிரண்டு தாளும்!*

# திருமலையைப் போற்று!



அருள்நெறிக் கவிஞர்
மா.சோதி.
ஆர்க்காடு

நமக்கு "கருணை" என்பது மிகவும் குறைவு. பொதுவாகவே நமது செயல்கள் கொடூரமாக இருக்கும். கோபம் வந்து விட்டாலோ கொடூரத் தன்மைக்கு நம்மிடம் குறைவேயில்லை.

எனவே, நம்மை பிறரிடத்து மிகவும் கருணையோடு இருத்தல் வேண்டும் என உபதேசித்திருப்பார் எனத் தீர்மானித்துக் கொண்டனர். அதாவது இரண்டாவதான "த" விற்கு "தயத்வம்" என அவர்கள் பொருள் புரிந்து கொண்டனர். இப்படியாகவே மனிதர்களும் தமக்கு பிரம்மா என்ன உபதேசம் செய்திருப்பார் எனச் சிந்திக்கத் தொடங்கினர். பொதுவாக மனிதர்களாகிய நமக்கு கஞ்சத்தனம் அதிகம் என்னும் அபிப்ராயம் அனைவரிடத்திலும் உள்ளது. கஞ்சத்தனம் மிகுதி என்று சொல்லுதற்கு நிதர்சனம் என்னவென்றால் வேதத்தில் ஓரிடத்தில் தபசு என்றால் என்ன என்று பொருள் கூறுமிடத்து பெரிய பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது. "தபசு" என்றால் தானம் செய்வது. "தானம் தவ:" இப்படியாக பல இடங்களில் தபசு என்றால் தானம் என்னும் பொருளில் சொல்லப்பட்டுள்ளது.



தொடரும்...



# வென்றது நாம ஜெபம்

– திரு. கே. இராமநாதன், சேலம்.

ஒரு முறை அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற சிவ பெருமானை நாடிச் சென்று கொண்டிருந்தான். அப்போது வழியில் நதியை கடக்க நேரிட்டது. அங்கே நதிக் கரையில் அனுமன் ராம நாமம் ஜெபித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அர்ஜுனன் அனுமனிடம், “ஏய், வானரமே! உன் இராமனிடம் உண்மையான ஆற்றல் இருந்திருந்தால் கடலைத் தாண்ட அம்புகள் கொண்டு சரப்பாலம் கட்டியிருக்கலாமே. அவர் ஏன் தேவையில்லாமல் கல் பாலம் அமைக்க வானரர்களின் உதவியை நாட வேண்டும்” என்று கூறி ஏளனம் செய்தான்.

அதுபோது தியானம் கலைந்த அனுமன் அர்ஜுனனின் கர்வத்தை அடக்க நினைத்தார். “நீ சொல்வது போல அம்புப் பாலம் அமைத்திருந்தால் அது என் ஒருவனின் பாரத்தையே தாங்காமல் உடைந்து போயிருக்கும். அப்படியிருக்க வானர வீரர்கள் அனைவரின் பாரத்தையும் அந்தப் பாலம் எப்படித் தாங்கியிருக்க முடியும்?” என்றார். அது கேட்ட அர்ஜுனன், “ஆற்றல் மிகுந்த நான் அமைக்கும் அம்புப் பாலத்தின் மீது எத்தனை வானரர்கள் ஏறி நின்றாலும் அது உறுதியாக நிற்கும்” என்று கர்வத்துடன் கூறினான்.

அர்ஜுனன் கூறியதைக் கேட்டதும் அனுமன் அவனிடம் “நீ சொல்வது போல செய்து காட்டி விட்டால் நான் உனக்கு அடிமையாகி உன் தேர்க்கொடியில் தங்கியிருப்பேன்” என்றார். உடனே அர்ஜுனனும், “ஒரு வேளை நான் தோற்று விட்டால் வேள்வித்தீ வளர்த்து அதில் விழுந்து நான் உயிர் துறப்பேன்” என்றான். அர்ஜுனன் அம்புகளால் பாலம் அமைக்கும் வரை அனுமன் ராம நாமம் ஜெபித்தபடி இருந்தார். அம்புப் பாலம் கட்டி முடித்ததும் அனுமன் ராம நாமத்தைக் கூறியபடி அதில் ஏறினார். உடனே அந்தப் பாலம் அவரது பாரம் தாங்காமல் நொறுங்கியது.




அர்ஜுனன், முன்பே சொன்னபடி யாகத்தீ வளர்த்து அதில் உயிர் விடத் தயாரானான். அப்போது அவ்வழியே வயோதிக அந்தணர் ஒருவர் அருகில் வந்து இருவரிடமும் நடந்தது என்ன எனக் கேட்டார். இருவரும் நடந்ததைக் கூறினர். அதுகேட்ட அவர், ‘‘போட்டி என்று வந்து விட்டால் சாட்சி அவசியம் தேவை. ஆகவே நீங்கள் மறுபடியும் பாலம் கட்டும் வேலை செய்யுங்கள். நான் தீர்ப்பளிக்கிறேன்” என்றார்.


உடனே அர்ஜுனன் கிருஷ்ணநாமம் ஜெபித்தபடி அம்புப்பாலம் கட்டினான். பாலம் நொறுங்கியதால் அலட்சியமாக இருந்த அனுமன் இராமநாமம் சொல்ல மறந்து பாலத்தில் ஏற பாலம் உடையவில்லை. உடனே வியந்து அந்தணரிடம் கேட்டனர். அதற்கு அவர் நீங்கள் இருவருமே தோற்கவில்லை. பக்தியும் நாம ஜெபமும் தான் வென்றது என்றார்.

# அனைவருக்கும் மோட்சம்

சித்திரக் கதை

கதை மூலம்: திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.
சித்திரம் : திரு. கே.துவரகநாத்.






அடுத்த இதழில் மற்றொரு கதையைப் பார்த்து படித்து மகிழ்வோம்!

முற்றும்.

# வினா விடை

1. திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பிரபந்தங்கள் எத்தனை?
   அ) ஆறு ஆ)நான்கு இ) பத்து
2. நம்மாழ்வாரின் அவதார மாதம், திருநட்சத்திரம் எது?
   அ) ஆடி-பூரம் ஆ) தை-மகம் இ) வைகாசி-விசாகம்
3. அஹோபிலம் என்று அழைக்கப்படும் திவ்யதேசம் எது?
   அ) திருக்காட்கரை ஆ) திருச்சிங்கவேள்குன்றம் இ)திருவாய்ப்பாடி
4. ஸ்ரீஹரிலக்ஷ்மி என்னும் திருநாமத்துடன் தாயார் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?
   அ) திருவனந்தபுரம் ஆ) திருநாவாய் இ) திருவித்துவக்கோடு
5. குபேரனுக்கு பெருமாள் அருள் செய்த திவ்ய தேசம் எது?
   அ) திருக்கோளூர் ஆ)திருக்கூடல் இ) திருப்பேரை

6) உபதேச ரத்தின மாலையை அருளிச் செய்தவர் யார்?
   அ) பெரிய நம்பிகள் ஆ)மணவாளமாமுனிகள் இ) உய்யக்கொண்டார்


7) ஸ்ரீராமாநுஜர் எத்தனை சிம்மாசனாதிபதிகளை நியமித்தார்?
   அ) 72 ஆ) 78 இ) 74

**விடைகள்**
1) அ, 2) இ, 3) ஆ, 4) அ, 5) அ, 6) ஆ, 7) இ

தொகுப்பு : திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*



உலக நன்மைக்காக 28-03-2021 அன்று திருப்பதி தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாகத்தில் அமைந்துள்ள மைதானத்தில் தி.தி.தே. வெகு விமரிசையாக நடத்திய பங்குனி உத்திர வைபவம்-லக்ஷ்மி ஜெயந்தி மஹோத்ஸவத் திருக்காட்சிகள்



